VASANTHAM Tamil Monthly 2-3 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

மாத இதழ்

AR-RABAE

ஜூலை 2008 July 2008

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!



## இதயங்களை இதங்கள் கொண்டிணைக்கும் கூட்டாண்மை வாழ்வு!



அவதூறு உணர்த்தும் அனர்த்தங்கள்

விண்ணுலகப்பயணம் இறைபணிப்பு

ஐவேளை தொழுகை இறைதுதிப்பு

IPC
ISLAM PRESENTATION COMMITTEE



எப்பணி நல்லதாகவும்
இறையச்சத்துக்குரியதாகவும் உள்ளதோ
அதில் எல்லோருடனும் ஒத்துழையுங்கள்!
سورة المائدة آية 2
-திருக்குர்ஆன் ௫:௨

VASANTHAM Tamil Monthly 2-3

# வசந்தம்

மாத இதழ்

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!



VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
July 2008
ஜூலை 2008
மலர் ௨ இதழ் 3

CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

EDITOR
ஆசிரியர்
M.A. Abdul Musavir

EDITORIAL BOARD
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq
Zinoofa Ansar

DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

PUBLISH
வெளியீடு
IPC
KUWAIT

CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

DIAL
2444116, 2444117 Extn: 208

FAX
2400057
Attn: IPC—VASANTHAM

e-MAIL
amusavir@gmail.com

WEBSITE
www.ipc-kw.com

# இந்த இதழில்..!

3 ஆசிரியரிடமிருந்து...!
ஊழல்:
விகாரங்களின் ஊதுகுழலாய்..!


4 முகப்புக் கட்டுரை
இதயங்களை இதங்கள்
கொண்டிணைக்கும்
கூட்டாண்மை வாழ்வு

8 துணை முகப்புக் கட்டுரை
அவதூறு உணர்த்தும்
அனர்த்தங்கள்

15 மார்க்கம்
விண்ணுலகப் பயணம்
இறைபணிப்பு..!
ஐவேளை தொழுகை
இறைதுதிப்பு..!!

18 மகளிர் சிந்தனை
சிறந்த பெண்
சீரிய குடும்பத்தின் சீர்மிகு சிறப்பம்










2 வாசகர் சுகந்தங்கள்
உண்மை நிகழ்வுகள்..
வலிமையான சாட்சிகள்..!

7 இறைவன்
இறைவன் தனித்தவனா?

10 விருந்தினர் பக்கம்
தலைக்குள்
ஒரு டைம்பொம்!

11 விருந்தினர் பக்கம்
தேவையற்ற
சுமைகள் ஏன்?

12 IPC வழித்தடங்கள்
ஆளுமை, விழாக்கள்,
நிகழ்வுகள்

14 மார்க்கம்
இறைபடைப்புக்கள்...!
இயற்கை ஆதாரங்கள்...!!


16 தொடர்
நான் திருக் குர்ஆன்
பேசுகின்றேன்!

17 தொடர்
மார்க்க
விழுமியங்கள்

20 போட்டி
அறிவுக் குறுக்கெழுத்து-3

بريد القراء – الافتتاحية – وحدة الخلق – النميمة – الحياة بعد الموت
– سدد أعمالك – أفلا ينظرون إلى الإبل.. – الإسراء والمعراج –
القرآن يتكلم – ما هو الإسلام – المرأة ذات الدين والخلق

# உண்மை நிகழ்வுகள்...! வலிமையான சாட்சிகள்..!




வசந்தம் - ஜூன் இதழ்
கண்டேன். அருமை.போதையின்
கோரத்தை விளக்கமாக
சித்தரித்திருந்தீர்கள்.
போதையின் பிடியில் சிக்கித்
தவிக்கும் இளைய சமூகம்
இனியாவது திருந்த வேண்டும்.
குணசீலன்
இராமநாதபுரம், தமிழகம்
ஸுப்ஹான் - குவைத்



கல்வியின் அவசியம்
குறித்து அழகாக விளக்கியது
அறிவுப் பார்... கட்டுரை!
தலைப்பு அதைவிட அசத்தல்.
தலைப்புக்களை எப்படி சார்
பிடிக்கிறீங்க?
சுபிட்சம் எங்கே? -இன்றைய
நவநாகரீக இஸ்லாமிய
நங்கையர்க்கு சரியான பாடம்.
பெண் சமூக ஆக்கபூர்வ
சிந்தனைக்கு வித்திடும்
வகையில் சகோதரி
ஸினூ.ஃ.பா அன்ஸார் தொடர்ந்து
எழுதி வருவது காலத்துக்கு
ஏற்ற, அவசியமான ஒன்று.
தொடரட்டும் அவரின் நற்பணி!
முஹம்மத் ர.ஃ.பீக்
கள்ளக் குறிச்சி, தமிழகம்
ஸுப்ஹான் - குவைத்



வசந்தம் - இதழை
தொடர்ந்து வாசித்து வரும்
வாசகன் நான்! வசந்தத்தில்
வெளிவரும் அனைத்துமே
கருத்தாழமிக்க வீரியம் நிறைந்த
எழத்துக்களாக அதேவேளை
சுருக்கமாக எழுதி மனத்தில்
பதிய வைத்துவிடுகின்றீர்கள்.
பாராட்டுக்கள்!
மே மாத வசந்தம் தாங்கி வந்த
'ஒரு புயலை அமைதி காவு
கொண்டது..! உண்மை நிகழ்வு



படித்து வியந்து இறைவனிடம்
நன்றியுடன் பிரார்த்தித்தேன்.
இந்த நிகழ்வை வடித்த
விதம் எல்லோர் மனத்திலும்
வலிமையான சாட்சியாகப்
பதிந்துவிட்டது.
முஜீபுர் ரஹ்மான்
பெருங்களுர்-புதுகை
குவைத்

## வாழ்த்துக்கள்

ஓராண்டு நிறைவுக்கு....
வசந்த எண்ணலில்
வானவியல் வண்ணமிட்ட
ஆசிரியருக்கு...
வசந்தத்தில் வீசும் சுகந்தத்தை
அடையாளம் காட்டிய
இயக்குநருக்கு...
எழுத்தாழி பெற்ற







நல்முத்துக்களான ஆண்
எழுத்தாளர்களுக்கு...
வசந்த ஓடத்தின்
துடுப்புக்களான பெண்
எழுத்தாளர்களுக்கு...
விருந்தினர் பக்க பன்னீர்
பூக்களுக்கு...
குறைகள் இல்லாமல் எதுவும்
இல்லை....
அது எவ்விதத்திலும்
வசந்தத்தின் பெருமைக்கும்
கடும் உழைப்புக்கும்



தடையாகாது.
அந்நிய நாட்டில் இத்தகைய
தமிழ் சஞ்சிகையை
தவழ விட்டிருக்கும்
பொறுப்பாளர்களுக்கு மனம்
நிறைந்த வாழ்த்துக்கள்!
பணி தொடர இறைவனை
இறைஞ்சுகின்றேன்.
இ.ஜுபைர் (பர்மா)
புதுச்சேரி, இந்தியா
ஸுலைபிய்யா - குவைத்

தாயே கவிதை கண்ணீர்
வரவழைத்துவிட்டது.
பெற்றவளின் சிறப்பை
உணராமல் அவளை கடைசி
காலத்தில் முதியோர் இல்லத்தில்
போய் விடும் கொடும் மனது
படைத்தவர்கள் இனியாவது
திருந்தட்டும்.



ஓராண்டல்ல... பல்லாண்டுகள்
வசந்தம் வாழட்டும்!
பிரேம் ஆனந்த்
தமிழகம், இந்தியா
ஸுப்ஹான் - குவைத்

வசந்தம் மே இதழ் கண்டேன்.
நீங்கா ஒளியாய்... ,
இறையச்சம் கட்டுரைகள்
அருமை.
ஃ.பைஸல் முஹம்மதின் திருக்
குர்ஆன் பேசுகின்றது-பயனுள்ள



தொடர்.
செல்வத்தின் மாயையில்
மயங்கிக் கிடக்கும் சமூகம்
ஸகீனா மணாளனின்
கட்டுரையைப் படித்தாவது
திருந்த வேண்டும்.
சகோதரி ஸினூ.ஃ.பா
அன்ஸார் அவர்களின் தாயே-
கவிதை பெற்றவளை பிரிந்து
கடல் கடந்து வாழும் என்
போன்ற எண்ணற்றவர்களை
தாய் நினைவின் நிழலில்
அமர வைத்துவிட்டது.
தாய்க்கு சேவை செய்ய
வேண்டிய தருணத்துக்காக
காத்திருக்கின்றேன்.
A. அப்துர் ரஹீம்
திருச்சி, தமிழகம்
சால்மியா - குவைத்



வசந்தம் மாத இதழ் ஒரு வருடத்தை பூர்த்தி அடைந்ததையொட்டி,அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஏராளமான வாழ்த்தோலைகள் இன்னும் வந்த வண்ணம் இருக்கின்றன. வசந்தத்தை வாழ்த்தி புத்துயிர் பூக்கச் செய்து கொண்டிருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள்!
(ஆ-ர்)

## ஊழல்:

# விகாரங்களின் ஊதுகுழலாய்..!



ஊழல் ஊடுருவிச் செல்லும் இடங்கள் யாவும் மனித வாழ்வாதாரத்தை உயிருடன் மரணிக்கச் செய்து, உதிரத்து உணர்வுகளின்றி சிந்தச் செய்யக் கூடியது. மனித வளத்தையும்-வாழ்வையும் ஊழல் எவ்விதப் பாகுபாடின்றியும் உறிஞ்சக் கூடியது.

அலுவலகத்தில் தேநீர் தருவதிலிருந்து ஆரம்பித்து, ஒரு நாட்டின் இராணுவத்துக்கு தளவாடங்கள் வாங்குவது வரை-சேவையாற்றும் மருத்துவத்துறை முதல், சேவகம் புரியும் காவல்துறை வரை- அனைத்திலும் கரைபுரண்டு ஓடுகின்றது ஊழல்..!

அழகிய சமூகவாழ்வின் ஏகாந்த அம்சங்களை கரையான்களின் இருப்பிடமாக்கி, சிறிது சிறிதாக அரித்து, இறுதியில் அச்சமூகத்தையே சாக்கடையாக்கிவிடுகின்றது. காலம் செல்லச் செல்ல சமூக மக்கள் அதனை தம் வாழ்வியல் பண்பாட்டை சீர்குலைக்கும் குளவிகளாகக் கருதாமல், அதுவே பண்பாடாகக் கருதத் தொடங்கிவிடுவதுதான் கொடுமை!

தனிப்பட்ட ஒரு மனிதரின் ஊழல் அவனையோ அல்லது அவனை நாடி நிற்கும் சிலரையோ மட்டுமே பாதிப்படையச் செய்யும். ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் செய்யும் ஊழல் ஒட்டுமொத்த சமூகத்தையும், நாட்டையும் ஏன், முழுஉலகத்தையுமே செல்லரித்து விடுகின்றது.

அமெரிக்காவின் 'வாட்டர்கேட் - ஊழலாக இருப்பினும் சரி, இந்தியாவின் 'போபர்ஸ்- பீரங்கி பேர ஊழலாக இருப்பினும் சரி, தனிப்பட்ட வாழ்க்கை சுகபோக ஆடம்பரத்துக்காக பிலிப்பைன்ஸ் நாட்டின் மார்கோஸ் செய்த ஊழலாக இருப்பினும் சரி, கம்போடியா, ஹைதி போன்ற இனவாத கோலோச்சு நாடுகளின் ஊழல் விஷயங்களாக இருப்பினும் சரி.... ஊழல் பெருச்சாளிகள் எல்லா நாடுகளிலும், அனைத்து மட்டங்களிலும் பரவி...விரவிக் கிடக்கின்றார்கள்!

இத்தகைய ஊழல் குப்பைகள் பெருகிடக் காரணம் என்ன?

ஆசை...பேராசை...! உலகை எப்படியாவது அனுபவிக்க வேண்டும் .. அதன் ஆடம்பர சுகபோக வசதிகளை அடைய வேண்டும்.. தன்னோடு மட்டும் முடிந்துவிடாமல், இத்தகைய வசதி அனுபவித்தல்கள் தன் சந்ததியையும் அடைய வேண்டும்... எனும் வெறி.. ஆகியவைதாம் ஊழல்களுக்கு உரம் போடுகின்றன. அதுவும் அதிகார போதையும், ஆட்சிக்கட்டிலும் ஒன்று சேரும்போது, ஊழல் பெருக்கெடுத்து ஓட ஆரம்பிக்கின்றது.

ஊழல் கட்டுப்பட வேண்டுமெனில், மனிதகுலம் அதன் அபாயத்தை உணர வேண்டும். ஒழுக்க உணர்வுகள் கொண்ட, இறையச்ச அம்சங்கள் மனத்தில் ஆழப்பதிய வேண்டும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்கள் குறித்து அச்ச உணர்வு மேலோங்கச் செய்ய வேண்டும். பொதுச்சொத்தின் மீதான தங்கள் ஆழிய பொறுப்பை அறிந்து செயல்பட வேண்டும்

அதற்காக என்ன செய்யலாம்?

இஸ்லாமிய ஆட்சியாளர் உமர் (இறைவன் அவரைப் பொருந்திக் கொள்வானாக!) அவர்கள் காலத்தின் ஒரு சிறு சம்பவம் இதற்கு வழிகோலும் என்பதில் கிஞ்சுற்றும் ஐயமில்லை!

ஆட்சிக்கட்டிலின் அதிகாரங்கள் தம்மிடத்தில் கோலோச்சிக் கொண்டிருந்தபோதும் அவர் அதனை எந்த நிலையிலும் தவறாகப் பயன்படுத்தவில்லை. ஒருமுறை அரசாங்க விஷயங்கள் குறித்து தமது அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தார். இரவின் இருள் கவிந்திருந்த நேரம் என்பதால் விளக்கொளியில் உரையாடல் நடந்துகொண்டிருந்தது. அரசாங்க விஷயங்கள் தொடர்புடைய உரையாடல்கள் முடிவுற்றவுடன், உமர் (இறைவன் அவரைப் பொருந்திக் கொள்வானாக!) அவர்கள் சொந்த விவகாரங்கள் பற்றிய பேச்சு வந்தது. உடனே, இறையச்சமிக்க அந்த ஆட்சியாளர் என்ன செய்தார் தெரியுமா? வெளிச்சம் தந்துகொண்டிருந்த விளக்கை உடனே அணைத்துவிட்டார். புறப்பட்ட ஆச்சரிய புருவங்களுக்கு பதிலும் தந்தார். 'இதுவரை அரசாங்க பேச்சுக்களை, அரசாங்க கருவூலத்திலிருந்து பெற்ற விளக்கின் ஒளியால் கவனித்தோம். இப்போது எனது சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசும்போது மக்கள் பணத்தில் வந்த இந்த விளக்கொளியைப் பயன்படுத்துவது சரியல்ல.. இதுகுறித்து நாம் இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும் ' என்றார்.

பாருங்கள்.. இதுதான் இறையச்சம்..!

ஆனால்.. இன்று...???

அலுவலக வேலைக்கு செல்லும்போது அதே வாகனத்தை சுயவேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றான் சாதாரண அதிகாரி.

அரசாங்கப் பணத்தில் வாங்கிய விமானத்தை தான் ஓய்வெடுக்க உல்லாச வாசஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்கின்றான் மக்கள் தலைவன்.

இதுதான் வித்தியாசம்..!

எனவே,ஏகஇறையச்சஒழுக்கவாழ்வுமேலோங்காதவரைஒவ்வொருநாட்டின்பாராளுமன்றங்களிலும் ஊழல் பிரச்னைகள் வெடித்துக் கொண்டுதான் இருக்கும்... விசாரணைக் கமிஷன்கள் புதிது புதிதாய் முளைத்துக் கொண்டுதான் இருக்கும்.

ஆசிரியர்
amusavir@gmail.com

# இதயங்களை இதங்கள் கொண்டு

சாதி-மத, இன, நிற, மொழி-களின் பெயரால் பிளவுபட்டு நிற்கும் சமூகம் சத்தியக்குடையின் நிழலில் கூட்டாண்மை வாழ்வு கண்டால் இதயங்கள் எவ்வாறு இதங்கள் கண்டு இணையும் என்பதை விளக்குகின்றார் கட்டுரையாசிரியர்




எழுத்து



ஸினூ.ஃ.பா அன்ஸார்


பூமிப்பரப்பின் பல்வேறு திசைகளிலும் பலவகையான சமூக மக்கள் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்,உள்ளங்கள் விரிசல்களுக்குட்பட்ட நிலையில்! ஒரே வடிவமைப்பில் ஒரே உணர்வுகளுடன் ஒரே செயற்பாடுகள் கொண்ட புனிதப்படைப்பான மனிதப் படைப்பு, இன்று உணர்வு ரீதியாக,உடல் ரீதியாக மனிதர்களின் மூலமே விகாரப்படுத்தப்பட்டு, தாக்கங்களுக்கு உட்பட்டுக் கொண்டிருக்கின்றது, அது ஏன்?

### ஒருமைப்பாடும் கூட்டுவாழ்வும்.

மனிதர்களிடையே கருத்து முரண்பாடுகள் முதல் கழுத்தறுத்தல்கள் வரையான வாதங்களும் மோதல்களும், சண்டை சச்சரவுகளும், வளர்ந்து கொண்டே போகின்றதே தவிர, குறைதலுக்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை. அவர்கள் ஒரே மதத்தைச் சார்ந்தோராயினும் சரி, பல தரப்பட்ட மதத்தைச் சார்ந்தோராயினும் சரியே!

பலவகையான காரணங்கள் இவைகளுக்குப் பின்புலமாக இருந்தாலும் அதிமுக்கிய காரணம், மனிதர்களிடையே ஐக்கியப்பாடு அரிதாகிப்போய், மன ஒற்றுமைகள் துண்டாடப்பட்டு, வேற்றுமைப்பிளவுகள் வேரூன்றி நிற்பதே! கூட்டாண்மை வாழ்வு கூறுபோடப்பட்டு குதர்க்கமாகிவிட்டதே!

தெருக்கோடிகள் துவங்கி சர்வதேச சபைகள் வரை கடுகாய்த் துவங்கும் சச்சரவுகள், பின் சரித்திர சமுத்திரமாய் முழு மனித சமூகங்களையும் அலைக்கழிக்க ஆரம்பித்து விடுகின்றது. ஐந்தறிவு கொண்ட விலங்கினத்திடையேகூட கூட்டு வாழ்வு எவ்வித ஏற்றத்தாழ்வுகளின்றி காணப்படுகின்றது.

ஆனால் பகுத்தறிவு கொண்ட மனிதனோ தன் அறிவைப்பயன்படுத்தி நல்ல பல ஆக்கங்களை உருவாக்கும் ஊக்கத்திறனான கூட்டு வாழ்வை தொலைத்து விட்டு, உளைச்சல்களுக்கும், ஓர்மை-ஒத்துழைப்பற்ற தனிமை வாழ்விற்கும் தன்னைத் தானே உட்படுத்திக் கொண்டு நொந்து நூலாய்ப் போகின்றான்.இறுதியில் வெறுமையை உணர்கின்றான். வெறுமையின் பிடியில் தன்னை வருத்திக் கொண்டு குலையும் குற்றுயிருமாய் வாழ்வை நகர்த்துகின்றான்.

### ஒருமைப்பாடு சிதைவுறக் காரணிகள் யாவை?

ஒரு மனிதனை சிறந்த பண்பாட்டுக்குரியவனாக மாற்றுவது, அவன் பின்பற்றி வரும் மதமேயாகும். மனிதர்கள் யாவரையும் சமஅந்தஸ்து பெறச்செய்யவும் அனைத்துவித மாச்சர்யங்களை தவிடு பொடியாக்கவும் கட்டாயம் துணை நிற்க வேண்டியவை மதங்கள்! அந்தோ! அவற்றில் சில மாச்சர்யங்களை தூரப்படுத்துவதை விட்டுவிட்டு, அவற்றை மனித மனங்களில் ஊன்றச் செய்துவிடும் பாதக வேலையைச் செய்துவருகின்றன. இதனால் அவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலப்பகுதிகளில் அவன் வேற்றுமைகளின் அடிப்படையிலேயே வாழ வேண்டியதாகி விடுகின்றது.

பிறிதொரு காரணியாக, மனித மனங்களை ஐக்கியப்படுத்தக்கூடிய, ஐக்கியப்படுத்தச்செய்யக்கூடிய ஆட்சியும் அதையும்

# இணைக்கும் கூட்டாண்மை வாழ்வு!



நடத்திச் செல்லக்கூடிய ஆட்சித் தலைவர்களும் காணப்படுவது அரிதாகிவிட்டதே! சுயநலங்கள், எதிர்கால பதுக்கல்கள், தான் எனும் கர்வம், தறி கெட்ட எண்ணங்கள், உலகாயதக் கோட்பாட்டுப் பின்பற்றல்கள் ஆகியன தலைத்தோங்கும்போது, மனிதர்களிடையே கருத்து வேறுபாடுகளாகத் துவங்கி கழுத்தறுக்கும் பகையாக மாறுகிறது. இதனால் ஐக்கியப்பட வேண்டிய மனித சமூகங்களை பிளக்கும் கோடாரியாக மதம் மாறிவிடுகின்றது.

மேலும் அறிவியல் கோபுரத்தில் வாழும் மனிதன் அவன் பெற்றுக் கொண்ட அறிவை மக்களின் பால் அன்பு கொள்ளால்போல் ஆக்கிச் செயல்படுதல் வேண்டும். அன்பே அனைத்திற்கும் முதல் என்பதற்கமைய அவன் இதயம் ஆகிவிடும் நிலை உருவாக்கப்பட வேண்டும். சமூகத்தை அழிக்கும் அமிலக் கரையான்களாகிய பொறாமை, அவதூறு, சந்தேகம், தீயஎண்ணங்கள், காழ்ப்புணர்வு, புறம், குரோத மனப்பான்மைகள், பொய் போன்றவற்றை அடியுடன் அப்புறப்படுத்தி வாழ வேண்டும். இதன் விளைவாக அன்பைக் கொண்டு பிற மனங்களை ஆக்கிரமிக்கலாம். சமூகத்தில் அன்பை நிலவச் செய்யும் குணங்களாக வாய்மை, தாராள மனப்பான்மை, நேர்மை, பொதுநல நோக்கு, மன்னிக்கும் மனப்பான்மை, தூய எண்ணங்கள், இதம் கலந்த மென்மை உரையாடல்கள் போன்ற ஒற்றுமைக்குரிய நல்லொழுக்கக் குணங்களே ஐக்கியப்பாட்டுக்குரிய சிறந்த கடிவாளமாகும்.

சந்ததி பெருக்கி சமுதாயத்தை நீளச் செய்யும் மையப் புள்ளியாகக் காணப்படும் வாழ்க்கை ஒப்பந்தமாகிய திருமணம் இன்னொரு காரணியாகும். இன்றைய அநேக திருமணங்கள் பணச்சந்தைகளில்தான் விலைபேசி நிச்சயிக்கப்படுகின்ற நிலைமைகள் உருவாகின்றன. அதனால், திருமண உறவுகள் வர்த்தக மையங்களாக ஆகி... எல்லாமே பணம் எனும் நிலைமைக்குக் கொண்டுபோய் விடுகின்றது. பொருத்தங்களும் ஒப்புதல்களும், மதரீதியாக கணிக்கப்பட்டு, உயரிய நற்குணங்கள் மூலமாக தேர்வுகள் நடந்தேறினாலன்றி ஐக்கியப்பாட்டுக்கு அடித்தளம் போட முடியாது.

## அன்றும் இன்றும்.

அனைத்துவிதமான சொல்லொண்ணா அராஜகங்களும் அவிழ்த்துவிடப்பட்டன. மனித நேயம் மனிதர்களிடத்தில் மறக்கடிக்கப்பட்டது.

அறியாமையின் அந்தகார இருளில், துர்க்குணங்கள் ஒவ்வொன்றுமே நன்கு கண்ணயர்ந்து உறங்கிக் கொண்டிருந்ததமை வரலாறு கண்ட உண்மை. வாழ்வியலின் வசந்தவியல் வறட்சியுற்று வதங்கிக் காணப்பட்டது. மக்களின் ஒருமைப்பாட்டிற்கான முகாந்தரம் அங்கு அறவே தென்படவில்லை.

கோத்திரப் பிளவுகள், குலப்பிரிவுகள் எங்கும் வியாபித்திருந்தது. ஆனால் அறிவு மாளிகையின் திறவு கோலை அவர்கள் தொலைத்திருந்ததால் தான் அற்றைய யுகம் அறியாமைக்காலம் எனப்பட்டது. அதனாலேயே அக்குணங்கள் அறியாமைக்கான கருவூலங்களாக அடையாளப்படுத்தப்பட்டன.

சற்று சிந்தியுங்கள்! இன்றைய மனிதன் அறிவியலின் உச்சியிலேயே அமர்ந்து கொண்டு, வாழ்வாதாரத்தை அங்கேயே உச்சிமுகர்ந்து விட்டான்.

அப்படியிருக்க



இன்றைய அறிவியல்யுக மனிதன் அன்றைய மடமைக்குணங்களின் அடிச்சுவட்டில் வாழ்வது நியாயமாகுமா, என்ன?

## ஒருமைப்பாட்டுக்கு ஒத்துப்போகுமா, இன்றைய உலகாயதத் தீர்வுகள்?

இதுபோன்றஜக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உலகம் முன்வைப்பது, அது தானாகவே வடிவமைத்துக் கொண்ட வழிமுறைகளை! உதாரணத்துக்கு, இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புகலிடம் தேடுவோர் பேசுவது பொது சிவில் சட்டத்தை! பன்முகச் சமுதாயங்கள், பல்வகை மதக்கோட்பாடுகள் கோலோச்சும் இம்மாபெரும் ஜனநாயக நாட்டில் எதனடிப்படையில் அச்சட்டம் அமையும்? ஒருமைப்பாடு பற்றி பேசிவிட்டு மக்களை பரிகசிக்கச் செய்யும் கோட்பாடாகத்தானே அதனை அமல்படுத்த முடியுமே தவிர ஐக்கியத்துக்கான ஐஸ்வர்யமாக அதனைப் பார்க்க முடியுமா, என்ன?

அதேபோல், கலப்புத் திருமணங்கள் மூலம் சமூக ஒருமைப்பாட்டுக்கு பாதை அமைக்கலாம் என சிலர் வாதிடக்கூடும். சற்று சிந்தியுங்கள்! வாழ்க்கை எனும் வண்டியின் சக்கரங்கள் இருவேறாக இருப்பின் பயணம் சுமுகமாக அமையுமா? எனவே, அவை சமூக ஒருமைப்பாட்டுக்கு சமாதிதான் கட்டுமே தவிர பலப்படுத்த செய்யாது. இவை தவிர்த்து, மனித சிந்தனை கரை கண்ட மாற்று வழிமுறைகள் அனைத்துமே ஒருசார் ஒருமைப்பாட்டுக்குத்தான் வழிவகுக்குமே தவிர, ஒட்டுமொத்த சர்வதேச மனிதகுல ஐக்கியப்பாட்டுக்கலல!

## இன்றைய தீர்வாக....இறுதி முடிவாக....ஒருமைப்பாட்டின் ஒரே முகமாக....

சுமார் 1400 வருடங்களுக்கு முன்....! இன்றைய ஸவூதி அரேபிய நாட்டின் மக்கா எனும் மாநகரில் அமைந்த புனித ஆலயம் ஒன்றை நிர்மாணிக்கும் வேளையில்.,'ஹஜருல் அஸ்வத்" எனும் கல்லை தூக்குவதில் அங்கு வாழ்ந்த பல்வேறு கோத்திரத் தலைவர்கள், தம்மிடையே பிளவு பட்டு நின்றனர். பிரச்னைக்கு தீர்வு எவ்வாறு அமைந்திருக்கும்?

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஒரே ஆட்சியின் நிழலில் கொண்டு வந்த மனிதப்புனிதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைத்தூதராக அறிவிக்கப்படாதிருந்த வேளை, கோத்திரத்தலைவர்களின் கோஷ்டிப்பூசல்களைக் களைந்து, பிரச்னைக்கு அழகிய தீர்வு ஒன்றை கொண்டு வந்தார். தமது சால்வையை விரித்து அதில் அக்கல்லை வைத்து கோத்திரத் தலைவர் ஒவ்வொருவரும் அதன் ஒவ்வொரு முனையையும் பிடித்துத் தூக்குமாறு பணித்தார்கள். ஒற்றுமைக்குரிய விதையை அங்கேயே தூவினார்கள்.

அஃதே ஆலவிருட்சமாக ஒற்றுமைக் குடையாக வளர்ந்தோங்கியது அந்த மடமை யுகத்தில்...! இதனால் எந்த மனிதரும் காயப்படவுமில்லை, காயப்படுத்தப்படவுமில்லை.

அன்றைய நிகழ்வுகளே இன்றைய தேவைகள்!



*வாழ்க்கை எனும் வண்டியின் சக்கரங்கள் இருவேறாக இருப்பின் பயணம் சுமுகமாக அமையுமா? எனவே, அவை சமூக ஒருமைப்பாட்டுக்கு சமாதிதான் கட்டுமே தவிர பலப்படுத்த செய்யாது.*

■



பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறக்கியருளப்பட்டு, இன்றும் அதன் தூய வடிவம் கிஞ்சிற்றும் பிசகுபடுத்தப்படாமல் நம் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இறைவேதமான திருக்குர்ஆன் வசனங்கள் இவை:

*நீங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்!*

3:103.

மனித உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, முதலில் அவற்றை ஐக்கியப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளின் பால் இட்டுச் செல்கின்ற ஒரே வாழ்க்கைநெறி இஸ்லாம் எனில், அதில் வாதப்பிரதிவாதங்களுக்கு இடமே இல்லை. அதன் கட்டங்களாக ஒவ்வொரு நாள் முயற்சியாக... வருடத்தின் ஒரு மாதப்பயிற்சியாக... வருடத்திற்கு ஒரு முறையான நிகழ்ச்சியாக ...இவ்வாறான செயற்பாடுகள் இஸ்லாம் மதத்தின் பயிற்சிக் களங்களாகும். மனித மனங்களை எந்நிலைகளிலும் ஒருங்கிணைக்கக்கூடிய விஷயங்களாக இவை மிளிர்கின்றது. ஆம்! இஸ்லாமிய வரலாற்றுச் சான்றுகளே இதற்கு சிறந்த உறுதுணைகள், உசாத்துணைகள்.

மேலும் இறையச் சத்திற்கும் நற்குண ஒழுக்க விழுமியங்களுக்குமே அவற்றின் அடிப்படையில் அமைந்த ஐக்கியப்பாட்டுக்கும் மட்டுமே, இஸ்லாம் முன்னுரிமை அளித்ததால்தான் அன்றைய தினத்திலேயே, கருப்பின பிலாலை புனித இல்லத்தில் நின்று தொழுகை - இறைவணக்க அழைப்பொலிக்கு அழைக்க பாதை அமைத்துக் கொடுத்தது. இவ்வாறான சம்பவங்கள் சிறந்த வாழ்க்கைப்பாடங்களாகும். ஐக்கியப்பாட்டுக்கான அழகிய வழிமுறைத் தடங்களாகும்.

## இன்றைய முஸ்லிம்களின் நிலை

அன்றைய இஸ்லாம் தான் காணப்படுகின்றது எவ்வித மாற்றங்களுமின்றி! ஆனால் இன்றைய முஸ்லிம்களிடத்தில் அதன் தூய கொள்கைகள் துண்டாடப்பட்டு, சிதைவுற்று, கூறு போடப்பட்டுக் காணப்படுகின்றது. நம்மில் சிலர் மேற்கத்திய வாழ்வின் வடிவங்களுக்கேற்ப வளைந்து கொடுப்பதனால் பெயரளவு முஸ்லிம்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பணத்தேவைகள் அவர்களின் மனப்போகங்களுக்குத் திரையிட்டு அவர்களை இவ்வுலகின் நிரந்தர சுதந்திர சுகங்களுடன் கட்டுப் போட்டு விட்டது. அந்நிய கலாச்சார மாயைகளில் கழனியிட்டு கரை காணச் செய்கின்றது.

உலகியல் வாழ்வின் உண்மை தாத்பரியங்களை குழிதோண்டிப் புதைத்து ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு என்பதை மறந்து விட்டோம். அரசின் பதிவேடுகளிலும் பதவிப் பெறுமானங்களிலும் உயர்நிலை அடைந்து அங்கே நிலைத்திருக்கச் செய்கின்றோம் எம் பெயர்களை! ஆனால், இறைவனிடத்தில் அரசாங்கப் பதிவேடுகளை ஆதாரமாகக்கொண்டு வாதிட முடியாது சத்தியப் பதிவேடுகளை அவன் சந்நிதானத்தில் சமர்ப்பிக்கும் வரை.....சத்தியப் பாதையில் நித்திய வாழ்வேற்போம் எம் வாழ்வின் கடை வரை...! ■

*அரசின் பதிவேடுகளிலும் பதவிப் பெறுமானங்களையும் உயர்நிலை அடைந்து அங்கே நிலைத்திருக்கச் செய்கின்றோம் எம் பெயர்களை! ஆனால், இறைவனிடத்தில் அரசாங்கப் பதிவேடுகளை ஆதாரமாகக்கொண்டு வாதிட முடியாது !*



துணைமுகப்புக் கட்டுரை

# அவதூறு உணர்த்தும் அனர்த்தங்கள்

**அவதூறு பரப்பும் அரக்கர்களின் அயோக்கியத்தனத்தையும் அவதூறு உணர்த்தும் அனர்த்தனங்களையும் படம்பிடித்துக் காட்டுகின்றது கட்டுரை!**

எழுத்து
மு.அ. அப்துல் முஸவ்விர்

அழுகு வாழ்க்கை ஆழியில் அலைகளாய் சிலவை பலமாய் அடித்து, வாழ்க்கையை சறுகுகளாய் ஆக்குவதுண்டு. அதனால் போற்றுதலுக்குரிய அவ்வாழ்வு ஒட்டுதல்கள் இன்றி, பின் ஏமாற்றுதல்களுடன், பிளவுகளைக் காண்கின்றது. அவ்வரிசையில் அவதூறுகள் அடித்தளமானவை. யூகங்கள் மூலம் ஊதப்படுவதனாலேயே அவதூறுகள் சீக்கிரம் பற்றி எரிந்து, எங்கும் படர்ந்து செல்கின்றது. வாய்வழி மார்க்கமாக கடத்தப்படுகின்ற அவதூறானது குறிப்பிட்ட நபர்களின் இதயங்களைக் கீறிக் கிழித்து, காயப்படுத்தி, ஆற முடியாத நிலைமைக்குத் தள்ளிவிடுகின்றது. சாதி, மத, இன வேறுபாடின்றி இன்றைய உலகில் இலவசமாகப் பரவும்-பரப்பப்பட்டு வரும் வக்கிரகுணங்களின் வடிகட்டிய வெளிப்பாடு இஃதான அவதூறுகள்!

கொள்கை ரீதியாகவும் சரி, தனிப்பட்ட விருப்பு வெறுப்பு ரீதியாகவும் சரி, இந்த துர்க்குணம் மனித மனங்களை மரணிக்கச் செய்து, மாவடுக்களை உருவாக்கி மந்தைக்கூட்ட மானுடமாக மனிதப்பிறப்பின் உன்னத தாத்பரியத்தை குழிதோண்டிப் புதைக்கின்றது.

பொறுத்துக் கொள்ளும் இயல்பின்றி, பிறரின் குற்றங்குறைகளைத் துருவுவதே தமது முழுநேர வேலையாகவும் ஆக்கச் செய்து எம் வாழ்வின் ஒளிகளை மங்கச் செய்து சிந்தனையை சீர்படுத்த செய்வதைவிட்டும் எம்மை மட்டுப்படுத்தி அழிக்கின்றது.

ஆம்....! அந்த பாதக பண்பு.....அல்ல...... அல்ல........அரக்கப் பண்பே.....

அவதூறு!

அது என்ன?

ஒருவனிடம் இல்லாத அல்லது அவன் செய்யாத-சம்பந்தப்படாத...மேலும் ஒரு சமூகம் செய்யாத அல்லது அதனிடம் இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி கூறுவதே அவதூறு!அவதூறுகளை நெருப்புத்தனலுக்கு நிகராகக் கூறலாம். ஊதிவிட ஊதிவிடத்தான் அது கொளுந்து விட்டெரியும்.

ஒரு அவதூறு எவ்வளவுக்கெவ்வளவு தவறானதாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாகப் பரவும்.புன்மக்களின் மனத்தில்தான் அந்நஞ்சு விரைவாகச் சென்றுவிடுகின்றதே அன்றி, நன்மக்களின் மனத்தில் செல்லவே செல்லாது.அவதூறைப் போன்று மிக வேகமாகப் பரவக் கூடியது வேறொன்றுமில்லை!

அவதூறுகள் ஏன்?

மனித மனங்களின் கருந்தேள் தன்மையே ஒருவரைக் குறித்து அவதூறுகளைப் பரவச் செய்கின்றது.

ஆண்-பெண் கலந்துறவாடுவது மலிதாகிப் போய்விட்ட இன்றைய காலகட்டத்தில் இத்தகைய அவதூறுப் பிரச்சாரங்கள் மிகச் சாதாரணமாகிப் போய்விட்டது கண்கூடு!

ஆனால், இத்தகைய நிலைமை இல்லாத சூழல்களிலும் அவதூறுகள் எவ்வித சஞ்சலமும், சலனமும் இன்றி ஆவேசமாக பரப்பப்படுவதுதான் கவலைக்குரிய விஷயம். அதுவும் அவதூறு பரப்புவதில் அதன் தீமையையும் கொடுமையையும் உணர்ந்தவர்களே ஈடுபடுவது அதைவிட வருத்தமானது.

கொள்கைரீதியாக, தகுதிவாரியாக, சிந்தனைத்துளிகளின் சீர்மிகு நற்பண்புகள் வாயிலாக எவரையும் எதிர்கொள்ள திராணி இல்லாத வக்கிர சிந்தனையாளர்கள் பொறாமையின் உளைச்சலில்.... தாக்குப் பிடிக்க இயலாத தணலில் வெந்து நூலாகும் அயோக்கிய சிகாமணிகள் பெரும்பாலும் கையிலெடுக்கும் ஆயுத அசிங்கங்களின் உச்சகட்ட உதப்பல் உக்கிரமமே இந்த அவதூறுப் பிரச்சாரங்களுக்குக் காரணமாகும்.

அதுவும், அவதூறு கூறப்படும் எதிர்தரப்பினர், எதிர்த்துப் போராடுவதில் இயலாதோராக இருக்கும்பட்சத்தில், அதுவும் பெண்களாக இருப்பின் இத்தகைய அவதூறு ஆரவாரங்களுக்கு அளவே இல்லை!பொதுவாக, ஆண்-பெண்ணை இணைத்து புனைந்து கூறப்படும் அவதூறுகள் சமூகத்திலும் அழகான(?) வடிவம் தரப்பட்டு சுவையாக(?) பேசப்பட்டும் பரப்பப்பட்டும் வருகின்றன. இரண்டு வகைகளில் இந்த அவதூறு அரக்கர்கள் தமது அரக்கத்தனத்தை வெளிப்படுத்தி சிற்றின்பம் காண்கின்றார்கள்.

1. ஆபாச நடையில் அவதூறுகளை விளித்து தமது ஆழ்மன வக்கிரங்களை வெளிப்படுத்திக் கொள்வது...

2. யார் மீது இட்டுக்கட்டி அவதூறு கற்பிக்கப்படுகின்றதோ, அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து சம்பவங்களை இட்டுக்கட்டியே மனத்தில் நிறுத்தி அவதூறாக அதனை வெளிப்படுத்துவது.

ஆழ்மனது பற்றிய கண்டுபிடிப்புக்களே இதுபோன்ற விஷயங்களை இன்று நாம் புரிந்துகொள்ள வகை செய்கின்றன. மனோதத்துவ நூல்கள்கூட ஒழுக்க வீழ்ச்சியடைந்த மனத்தின் குரோத வெளிப்பாடே இத்தகைய தீயகுணங்களின்பால் மனத்தை இட்டுச்






செல்வதாக கூறுகின்றன. தன்னையறியாமலோ அல்லது வேண்டுமென்றோ, அறிந்துகொண்டோ உருவாக்கிக் கொண்ட மனோபிம்பங்களில் ஆழ்ந்துவிட்ட இந்த சிற்றின்ப அரக்கர்கள் அவதூறு பரப்பி அதன் மூலம் மனத்திருப்தியடைவதன்பால் தம்மை பலவந்தமாக அழைத்துச் செல்கின்றார்கள்.

'கோயபல்ஸ்" கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்றைய 'கோயபல்ஸ்"-களாக மாறி தனிப்பட்ட மனிதரை மறைமுகமாகத் துன்புறுத்தி, சமூகத்தின் நிம்மதியை கெடுத்து அதனை சிற்றின்பத்தில் திளைக்கச் செய்யும் வக்கிரபுத்தி வண்டாளர்களாக வலம் வருகின்றார்கள்!

இன்று அவதூறு பரப்புவதை சில மனிதர்கள் தமது வாடிக்கையாகவே ஆக்கிக் கொண்டிருக்கின்றார்கள், அது தனிப்பட்ட மனிதர் மீதான அவதூறாக இருப்பினும் சரி, கூட்டமைப்பின் மீதான அவதூறாக இருப்பினும் சரியே!

வாழ்க்கைநெறி குறித்த உன்னத பண்பாட்டை அறியாதவர்கள்தான் இத்தகைய கீழ்த்தரமான அவதூறு பரப்பும் அரக்கர்களாக இருக்கின்றனர் என்பது இல்லை. வாழ்வின் சரியான கோட்பாட்டுச் சின்னங்களை அடையாளப்படுத்திக் காட்ட வேண்டிய இறைநம்பிக்கையாளர்களும் தம்மை அவமானச் சின்னங்களாக்கி அவதூறு பரப்பும் 'புனிதப் பணியில்" ஈடுபடுவது வெட்ககரமான விஷயம்! தமது இத்தகைய சிற்றின்ப சிதறல் புத்தி குறித்தும் அது எத்தகைய கொடிய விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும் இந்த அவதூறு போதையாளர்களின் புத்தியில் உறைப்பதில்லை. தம் முயற்சியில் சளைப்பதுமில்லை. ஆனால், ஒருநாள் அதுவே தம்மை நோக்கித் திரும்பும்போது அவர்களுக்குத் தெரியவரும்... தாம் எத்தகைய கீழ்த்தர....மிருகத்தனமான செயலை செய்துகொண்டிருந்தோம் என்று....!

உலகை உய்விக்க வந்த உத்தம தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவதூறுக்கு அழகிய வரைவிலக்கணம் தந்தார்கள்:-

*....நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம்*
*இல்லையெனில், நீ அவனைப் பற்றி*
*இட்டுக்கட்டுகின்றாய்... அவதூறு கூறுகின்றாய்!*

*அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)*
*ஆதாரம்: முஸ்லிம்*

*ஒருமுறை முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது உரையின்போது, 'உள்ளத்தில் இல்லாது உதட்டால் நம்பிக்கை கொண்டவர்களே!....அவர்களது குறைகளை ஆராய்ந்து கொண்டிருக்காதீர்கள். யார் மற்றவர்களின் குறைகளைத் தேடித் திரிகின்றார்களோ, அவர்களது குறைகளை அல்லாஹ் பின்தொடர ஆரம்பிப்பான். யாருடைய குறைகளை அல்லாஹ் பின்தொடர ஆரம்பிக்கின்றானோ, அவர்கள் தமது வீட்டில் செய்யும் குறைகளையும் பகிரங்கமாக்கி அவர்களை இழிவுபடுத்திவிடுவான் என்று கூறினார்கள்.*

*ஆதாரம்: அஹ்மத்*

இஸ்லாமிய வரலாற்றில் இத்தகைய அவதூறுகள் முஹம்மத் (ஸல்) அவர்களின் காலந்தொட்டே இருந்து வந்தன. இறைநம்பிக்கையாளர்களின் அன்னை-அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் அன்பு மனைவி, ஆயிஷா (ரலி) அவர்கள் மீதே அவதூறு சுமத்தியவர்கள்தாம் இந்த அரக்க சண்டாளர்கள். அன்னை ஆயிஷா (ரலி) அவர்களே தம் மீது புனையப்பட்ட அவதூற்றைக் குறித்து அறிவித்திருக்கின்றார்கள். அதன் சுருக்கம் இதுவே:-

பனுல் முஸ்தலிக் போரின்போது.... போர்க்குழுவினருடன் சேர்ந்து அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பிக் கொண்டிருந்த வேளை அன்னை ஆயிஷா (ரலி) அவர்களும் அவருடன் இருந்தார்கள். ஒருநாள் இரவு, தேகசுத்திக்காக சென்றபோது தான் தவறவிட்ட கழுத்துமாலையைத் தேடுவதில் ஈடுபட்டதால் அன்னை அவர்கள் போர்க்குழுவினருடன் புறப்பட இயலாமற்போனது. ஸஃப்வான் பின் முஅத்ததலுஸ் ஸுலைம் (ரலி) என்ற நபித்தோழரும், அதுசமயம் சற்றுநேரம் உறங்கிவிட்டதால் பின் தங்கிவிட்டார்கள். காலையில் சற்று அதிக நேரம் தூங்கும் பழக்கமுடையவராக இருந்ததால், அவர் பயணக்குழுவைத் தவறவிட நேர்ந்தது.

பின்னர், ஸஃப்வான் அவர்கள் புறப்பட தயாரானபோது, அன்னையைக் கண்டவுடன் யாரென்று புரிந்துகொண்டார்கள். ஏனெனில், பர்தா தொடர்பான சட்டம் வருவதற்கு முன்னர், அன்னையை பலமுறை அவர்கள் பார்த்திருக்கின்றார்கள். அன்னையை தன் ஒட்டகத்தில் அமரும்படி கோரி, கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

இவர்கள், தாமதமாக வந்ததைக் கண்டு சிலர் அவதூறு கற்பிக்க ஆரம்பித்துவிட்டனர். ஏற்கனவே, இஸ்லாத்தின் விரைந்த வளர்ச்சி, அபரிமித செல்வாக்கு, அதைப் பின்பற்றுவோரின் தார்மீக வாழ்வியல் தடங்கள், பண்புநலன்கள் குறித்து பெரும் காழ்ப்புணர்வு கொண்ட கயவர்கள் வாய்க்கு அவல் கிடைத்ததுபோல் ஆகிவிட்டது இச்சம்பவம்!

அதைத் திரித்து, கண்டவாறு உருவேற்றி அவதூறு கூறியவர்களில் அனைவரிலும் முதன்மையாக அப்துல்லாஹ் இப்னு உபை இருந்தான்.

இந்த அவதூறு குறித்து அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாய்மொழிக்கூற்று வேதனை பொங்க வெளிவந்தது. அவர்கள் கூறினார்கள்:

'முஸ்லிம்களே! ....அந்த மனிதனின் தாக்குதலிலிருந்து எனது கண்ணியத்தைக் காப்பாற்றக் கூடியவர் யார்? அவனோ என் வீட்டார் மீது அபாண்டம் சுமத்தி அளவுக்கு மீறி எனக்கு துன்பம் அளித்திருக்கின்றான்.... '

பாருங்கள்! இறைநம்பிக்கையாளர்களின் அன்னையையும் விட்டு வைக்காத...., இருமை உலகின் இணையில்லத தலைவராம் நம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களையே நோவிக்கச் செய்த இந்த அவதூறு பரப்பும் அரக்க சண்டாளர்களுக்கு சாதாரண மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம்?

எனவே, அவதூறு பரப்பும் விஷவாசிகள் சிந்தித்து திருந்த வேண்டும். இல்லையெனில் திருத்தப்பட வேண்டும். ■

# தலைக்குள் ஒரு டைம்பொம்



நாலக. 11வயது பள்ளி மாணவன். 6-ஆம் வகுப்பில் படிக்கும் அவன் சிறந்த திறமைசாலி. 5-ஆம் தர பொது உளச்சார்பு தேர்வில் சித்தியடைந்து 6ஆம் வகுப்பில் படிப்பதற்காக கொழும்பு (இலங்கை) ஒரு கல்லூரியில் அனுமதி பெற்றான். தினமும் அவன் ஊரிலிருந்து பாடசாலை வேனில் கல்லூரிக்குப் போய் வருவான்.

ஒரு திங்கட்கிழமை நாலக வேனில் இறங்கி நடந்து செல்லும் போது கால் இடறி விழுந்து விட்டான். ஏதிர்பாராமல் விழுந்துவிட்ட அவனை அவனுடன் சென்ற சக மாணவர்கள் கைகொடுத்துத் தூக்கி விட்டனர். வகுப்பறையை அண்மித்ததும் மீண்டும் விழுந்தான். வகுப்பறைக்குள் சென்ற அவன் தனக்கு கடுமையாக தலை வலிப்பதாகச் சொல்லவே வகுப்பாசிரியர் பத்திரமாய் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

வீட்டுக்கு சென்றதும் உடனே தூங்கி விட்டான். தூங்கிய அவனுக்கு எழுந்து வர முடியவில்லை. ஒரு முறை வாந்தி எடுத்தான். உடனே பெற்றோர் பக்கத்திலிருந்த தனியார் வைத்திய நிலையம் ஒன்றுக்கு கொண்டு சென்றனர். அவனை பரிசோதித்த வைத்தியர் உடனடியாக லேடி ரிட்ஜ்வே (கொழும்பு) சிறுவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுங்கள் என்று சொல்லி விட்டார்.இந்த நிலையில் தான் அவர்கள் அந்தப் பையனோடு எங்கள் வோட்டுக்கு வந்து சேர்ந்தனர். பையனுக்கு ஏதோ ஒரு நோய் இருக்கிறது என்று அறிந்து கொண்ட தாய் கண்ணீர் மல்க ஆதரவுடன் பையனின் தலையைத் தடவிக் கொண்டிருந்தாள்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை முழுமையாக பரிசோதனை செய்து முடித்ததும், பையனுக்கு பல பிரச்னைகள் இருப்பது தெரிய வந்தது. சாதாரணமாக கண்கள் இரண்டும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பதுதான் இயற்கையாக இறைவன் ஏற்படுத்தியிருக்கும் அமைப்பு. பையனின் கண்களோ இரண்டும் ஒரு சேர இயங்க மறுத்து விட்டன. ஒன்று வடக்கையும் ஒன்று கிழக்கையும் பார்க்க ஆரம்பித்து விட்டன. பையனோ ஒரே நேரத்தில் பல பிம்பங்கள் தெரிவதாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் அருந்தும் பானத்தையும் உண்ணும் உணவையும் வாய்க்குள்ளிருந்து தொண்டைக்குழியினூடாக விழுங்க முடியாமல் தடுமாறினான். இதனால் அனைத்தும் வெளியே கொட்ட ஆரம்பித்தது. அழகாக எழுத முடிந்த அந்தப் பையனுக்கு கையால் ஒரு பேனாவைக் கூட ஸ்திரமாகப் பிடித்துக் கொள்ள முடியாதவாறு கைகள் நடுங்க ஆரம்பித்தன. இப்படிப் பல பிரச்னைகள்.

பரிசோதனை முடிவில் பையனின் நோய் என்னவென்பது மிகத் தெளிவாக விளங்கியது. இதனை எப்படி பெற்றொருக்கு சொல்வதென்பது பெரும் சுமையாக இருந்தது.

விரும்பத்தகாத ஒரு செய்தியை அறிவிப்பதும் அதைத் தொடர்ந்து வரும் சோக உணர்வுகளோடு சேர்ந்து சோகத்தில் பங்கேற்பதும் வைத்தியசாலைகளில் தினமும் நடக்கும் நிகழ்வுகள். அவ்வாறான சூழ்நிலைகளில் நாம் சோகத்தால் உருகி விடுவோம். இந்தப் பையன் விடயத்தில் கூட அப்படியே! அவன் கற்கின்ற கல்லூரியின் ஆசிரியர்கள் பலரும் நாலக பற்றி விசாரிப்பதற்காக தொடர்பு கொள்கின்ற தொலைபேசிகளின் அழைப்புக்களின் எண்ணிக்கை அவனின் திறமையை, சிறந்த தரத்தை,சுட்டித்தனத்தை சொல்லிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் பையனின் மூளைக்குள் ஒரு டைம்பொம் போன்று ஒரு கட்டி இருக்கிறது என்பதை எப்படிச் சொல்ல முடியும்? இந்தப் பையன் பெரியவனாகி, பல சாதனைகள் புரிந்து, பெற்றோருக்கும், குடும்பத்துக்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தனர் அந்த அப்பாவிப் பெற்றோர். குழந்தையைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள் இவ்வாறே இருக்கும்.. இந்த எதிர்பார்ப்புக்கள் சில மணித்துளிகளில் தகர்த்தெறியப்படப்போவதை அவர்கள் எப்படியும் அறியத் தான் வேண்டும்.

அந்தப் பையனை CTscan பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அந்தப் பரிசோதனை மூலம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி, மூளையை துண்டு துண்டாக வெட்டிப்பார்த்தது போன்று படம் எடுக்க முடியும். இதன் மூலம் மூளைக்கு உள்ளேயிருக்கும் நோய்களை கண்டு பிடிக்கமுடியும். இந்தப் பரிசோதனைகளை நாலகவுக்கு செய்த போது மூளையின் முக்கிய பகுதியான அடி மூளையில் (Brain stem) புற்று நோய் வகையைச் சேர்ந்த ஒரு கட்டி வளர்ந்திருப்பது தெரிய வந்தது. Brain stemglioma அந்தக் கட்டியை ஒபரேஷன் செய்து குணப்படுத்த முடியாது.

பல இலட்சியக் கனவு கண்ட அவன் பாவம், எல்லாத் துவாரங்களிலும் டியூப் வருவதும் போவதுமாய் கட்டிலிலே தூங்கிக் கொண்டிருந்தான். எஞ்சியிருக்கும் சில நாட்களும் நகர்ந்து கொண்டிருந்தது.

மரணம் என்பதை மறந்திருக்கும் எமக்கு இது ஒரு சிறந்த பாடம். குழந்தைகள், உலகம் சம்பந்தமான விடயங்களில் நிச்சயம் எம் எதிர்பார்ப்புக்கள், கனவுகள் கட்டாயமானவை தான். ஆனால் அதே நேரம் எமை இவ்வுலகில் மூழ்கடித்து விடாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நம்மில் எத்தனை பேர் இப்படியான டைம் பொம் நோய்களை வைத்திருக்கிறோம் என்பதை அறியோம். அதே போல் எத்தனை பேர் இங்கு இத்தகைய நோய்க்கிரையானார்கள் என்பதையும் நாம் அறிவோம். இந்த நிலையில் நாமும் நமது குடும்பமும் மரணத்துக்குத் தயாரானவர்களாக வளர்வதைத் வாழ்வதைத் தவிர நமக்கு வேறு வழியே இல்லை. இதுவே எம் உலக வாழ்வின் சித்தாந்தக் கொள்கையும் கூட....

*இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் செல்வங்களும் உங்கள் பிள்ளைகளும் அல்லாஹ்வை நினைவுகூர்வதைவிட்டு உங்களை அலட்சியத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். -திருக்குர்ஆன் 63:9*

■

எழுத்து

டாக்டர்
முஹம்மத் ரயீஸ்
இலங்கை



# தேவையற்ற சுமைகள் ஏன்?

ஒரு பழைய புத்த மதக் கதை இது.

புத்த துறவிகள் சிலர் பயணம் சென்றனர். வழியில் ஓர் ஆழமான நதி. அதைக் கடந்து போக வேண்டும். என்ன செய்வது?

ஒரு துறவி, “அதோ, அந்த மரத்தை வெட்டிக் கட்டுமரம் தயாரிக்கலாம். அதன் உதவியால் ஆற்றை எளிதில் கடந்து விடலாம்” என்றார்.

அதே போல் கட்டுமரம் செய்து நதியைக் கடந்தனர்.

எந்த ஆபத்தும் இல்லாமல் நதியைக் கடந்து வந்ததால் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தியானித்தனர்.

மீண்டும் பயணம் தொடர்வதற்கு முன்பாக இன்னொரு துறவி கூறினார்: “இந்தக் கட்டுமரம் மட்டும் இல்லாதிருந்தால் நாம் நதியைக் கடந்திருக்க முடியாது. நமக்கு உதவிய இதனை விட்டுச் செல்லுதல் தகாது. இதையும் நம்முடன் எடுத்துச் செல்வோம்!.”

துறவிகள் கட்டுமரத்தைச் சுமந்து சென்றனர். பயணம் மிகவும் சிரமமாகிவிட்டது. வழியில் மக்கள் துறவிகளைப் பார்த்துச் சிரித்தனர்.

உடனே துறவிகள், ‘இது தேவையற்ற சுமை’ என்பதை உணர்ந்து கட்டுமரத்தை விட்டு விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தனர்..

சற்று சிந்தியுங்கள்! இன்று நம்முடைய வாழ்க்கைப் பயணத்திலும் கூட எத்துணைச் சுமைகள்!

‘இந்த உலகம்தான் நிலையானது: எல்லா இன்பங்களையும் இங்கேயே அனுபவித்து விடவேண்டும்’ எனும் நினைப்பில் கோடிக்கணக்கில் சொத்து குவிக்க முயல்கிறார்கள். வீடு, தோட்டம், நிலபுலன்கள், வணிக வளாகம் என வாங்கிச் சேர்க்கிறார்கள். உள்நாட்டு வங்கிகள் போதாது என்று வெளிநாட்டு வங்கிகளிலும் கணக்குகள்! இவர்களின் முதுகுகளில்தான் எத்தனை எத்தனை ‘கட்டுமரங்கள்!’

எதற்காக சுமக்கிறோம்; யாருக்காக சுமக்கிறோம் என்று தெரியாமலேயே சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களைப் பார்த்துதான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அழகாகக் கூறினார்கள்:

*“இந்த உலகில் நீ ஓர் அந்நியனைப் போல அல்லது ஒரு வழிப்போக்கனைப் போல வாழு!“*

நம்முடைய செயல்கள் அப்படியா இருக்கின்றன! மரணம் என்பதே நமக்கு இல்லை என்ற எண்ணத்தில்தானே பலவிதமான காரியங்களிலும் ஈடுபடுகிறோம்.

உலக இன்பங்களுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருப்பவர்களைப் பார்த்து திருக் குர்ஆன் கூறுகிறது:

*“பிறரை விடக் கூடுதலாக உலக வசதிகளைப் பெற வேண்டும் எனும் எண்ணம் உங்களை மெய்மறதியில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. நீங்கள் மண்ணறைகளை சென்றடையும் வரையில்!*
*அவ்வாறன்று! விரைவில் உங்களுக்குப் புரிந்து விடும்... (உங்கள் நடத்தையின் இறுதி விளைவை) உறுதியாக நீங்கள் அறிந்திருந்தால் உங்கள் நடத்தை இப்படி இருந்திருக்காது*
*திருக்குர்ஆன் 102:1-6*

மறுமையில் வெற்றி பெற வேண்டும் எனும் ஒரே இலக்குடன் நம்முடைய பயணம் அமைய வேண்டும்.

அந்த மறுமை வெற்றிக்கு முட்டுக்கட்டையாக நாம் முதுகில் சுமந்திருக்கும் ‘கட்டுமரங்களை’விட்டு விட வேண்டும்.

அந்த கட்டுமரங்கள் எவ்வித பயனும் அளிக்காதவை எனும் உண்மையை உணர்ந்தால்தான் அவற்றைக் கைவிட முடியும்.

அப்பொழுதுதான் மறுமைப் பயணம் எளிதாகும்.

செய்வோமா?. ▪

எழுத்து



சிராஜுல் ஹஸன்
பொறுப்பாசிரியர்
சமரசம்
சென்னை

# மறுமலர்ச்சித் தேர்வு, பெண்கள் அறிவு

பெண் அடைந்து கொள்ளும் அறிவு ஞானமானது சமுதாயச் சறுக்கல்களிலிருந்து அவளையும் அவளைச் சார்ந்தோரையும் தூக்கி விடக்கூடிய கரம் போன்றதாகும். இன்றைய அதிமுக்கியத் தேவையாக கோடிட்டுக் காட்டப்படக் கூடியதாக இருப்பது பெண்கல்வியே எனின், அது மிகையல்ல! சமுதாயத்தை ஒளிப் பிழம்பால் இலங்கச் செய்யும் அறிவானது பெண்களின் மூலம் அரிய பல மாற்றங்களைக் கொணர்ந்து வாழ்க்கையை திட்டமிடச்செய்து, திடப்படுத்தக் கூடியதாகும்.

இஸ்லாமிய நிலையத்தின் நோக்கமே பெண்களை அறிவின்பால் இட்டுச்செல்ல வேண்டும் என்பதே! இவ்வகையில் இஸ்லாமிய நிலையத்தில் ஈறாறு வருடங்களாக பெண்கள் இதயங்களில் அறிவு விதைகளை தூவிக் கொண்டிருக்கும் ஒரு பெண் அறிவ ாளர்,சிந்தனையாளர்,மருத்துவத்துறையில் தடம் பதித்த பல் வைத்தியர் ஒருவரைக் குறித்து அறிமகம் செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம். எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்க தேசியம் பெற்றவர் இவர்! அங்கேயே மருத்துவ தொழிலில் ஈடுபட்டார். கெய்ரோ பல்கலை கழகத்தில் தன் கல்வியை மேற் கொண்டார். இற்றை வரை அறிவு நூல்களுடன் வாழ்ந்து கொண்டு அதன் சுவாசத்தில் இதம் கண்டுகொண்டிருக்கும் இவர் திருக் குர்ஆன் ஓதுகலை மற்றும் மனனம், இஸ்லாமிய சட்டம், மார்க்கக் கோட்பாடுகள், திருக் குர்ஆன் விளக்கவுரை, குழந்தை மேலாண்மை போன்ற பயிற்சிநெறிகளை பன்நாட்டவருக்கும் வழங்கி பெண் கல்வியை விழித்தெழச் செய்து கொண்டிருக்கின்றார்.

மன இளமையுடன், அறிவுத்தாகத்துடன், இங்கித மொழி பேசும், இனிமை கலந்த உரையாடல்கள் அவரின் சொற்பொழிவுகள்! கலப்பற்ற அவரின் தெளிந்த அறிவூற்றுக்கணைகளில் எம் அனைவரினதும் தாகம் தணித்துக் கொண்டு, அவனியில் அறிவுக்கிரீடம் அணிந்து எம் இருமை செயல்களையும் அலங்கரிப்போம். இறையருள் துணை நிற்கட்டும்!



ரவ்தாவிலிருந்து
ராபிதா



# பாராட்டு விழா

ரவ்தா மகளிர் பிரிவின் ஓர் அங்கமான பாடசாலைப்பகுதி கடந்த 02-06-2008 அன்று திங்கள் கிழமை சிறப்பு விழாவொன்றை மேற் கொண்டு நடாத்தியது. பாடசாலைப்பகுதித் தலைவி லத[illegible] [illegible]த் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற இவ்விழாவில் திருக்குர்ஆன் போட்டி, இஸ்லாமியப் பாடல் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றதுடன், புனித இஸ்லாத்திற்குள் தன்னை இணைத்துக் கொண்டும் 15 வருடங்களாகவும் இஸ்லாமிய அறிவை பெற்றுக் கொண்டும், ஐம்பதிற்கும் மேற் பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு தன்னை முழுமையான முஸ்லிமாக அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையைச் சேர்ந்த சகோதரி ஃ. பாத்திமா பீரிஸ் அவர்களையும் இந்த விழா கௌரவித்தது. அத்துடன், இஸ்லாமிய நிலையத்தின் பாடசாலைப் பகுதியில் கடந்த 12 வருடங்களாக பயிற்சி நெறிகள் பலவற்றை தனக்கே உரிய பாணியில் நடத்தி வந்த எகிப்திய தேசத்தை சேர்ந்த சகோதரி டாக்டர் ஹனா அவர்களையும் இவ்விழா கௌரவித்தது.

அறிவு வழங்குவோரையும், அறிவைத் தேடி வருவோரையும் ஒரு சேர சிறப்பித்து, கௌரவிப்பதில் இஸ்லாமியப் நிலையங்கள் பெரிதும் அக்கறை செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# அறிவுத் தேர்வில்
# சந்தோஷ வெற்றியாளர்கள்!



திரு. அஸீஸுர் ரஹ்மான்



அஷ்ஷேக் ஜாஸிம்-அல்-கந்தரி



திரு. ஜாகிர் ஹுஸேன்

'வசந்தம்' - முதலாண்டு சிறப்பிதழ் - மே '08 - முதல் அறிவுக் குறுக்கெழுத்துப் போட்டி நடத்தி வருவதை வாசகர்கள் அறிவீர்கள்!

முதலாவது அறிவுக் குறுக்கெழுத்துப் போட்டிக்குப் படிவங்கள் குவிந்துவிட்டன. தமிழ் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தமது அறிவுத் திறமையை பரீட்சித்துப் பார்த்துக் கொண்டது எம்மை வியப்படைய வைத்துவிட்டது.

வாசகர்களுக்கு இலகுவை உண்டாக்கிட-முதலாவது போட்டியில் காணப்பட்ட சிறுபிழைகள் - உதாரணமாக, கட்டங்களில் எண்கள் விடுபட்டது போன்றவை - கருத்தில் கொள்ளப்படவில்லை.

விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றாதவர்களின் படிவங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

சரியான விடைகள் எழுதியோர் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருந்ததினால் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

03.07.2008 அன்று IPC தலைமையகத்தில் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் நடைபெற்றது. முதலாம் பரிசுக்குரியவரை IPC, அரபியர் சமூக அழைப்புப்பணித்துறைத் தலைவர் *அஷ்ஷேக் ஜாஸிம்-அல்-கந்தரி* அவர்கள் தேர்ந்தெடுத்தார். IPC வெளியிடும் தெலுகு மொழி சஞ்சிகையான *'நலவன்கா'-வின் ஆசிரியர் திரு. அஸீஸுர் ரஹ்மான்* மற்றும் IPC வெளியிடும் மலையாள மொழி சஞ்சிகையான *'சந்தேசம் - ஆசிரியர் திரு. ஜாகிர் ஹுஸேன்* ஆகியோர் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்குத் தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்றவர்கள், பரிசு விவரங்கள் மற்றும் அறிவுக் குறுக்கெழுத்துப் போட்டி ஜுன் மாத வெற்றியாளர்கள் விவரம் முதலியன வரும் ஆகஸ்ட் 2008 வசந்தம் இதழில் வெளியாகும், இறை நாடினால்..!வெற்றியாளர்களுக்கு வாழ்த்துக்கள்! மற்றவர்கள் முயற்சியைத் தொடர.. இனி வெற்றிக் கனி பறித்திட.. பிரார்த்தனைகள்!

*-தலைமையகத்திலிருந்து* இளவேனில்

## வெற்றியாளர்கள்

| | | |
|---|---|---|
| | *முதல் பரிசு* | |
| இ.அருள்தாஸ் | ID 281052902368 | கப்து |
| | *2-ஆம் பரிசு* | |
| சர்மிளா | ID 271030303867 | ரவ்தா |
| | *3-ஆம் பரிசு* | |
| காதர் ஹுஸைன் | ID 276012002676 | பர்வானியா |



# இறைப்படைப்புக்கள்.., இயற்கை ஆதாரங்கள்...!

இந்த மண், பெரும் மலைகள், விண், கண் சிமிட்டும் விண்மீன்கள், வெள்ளொளி, அள்ளிப் பொழியும் வெண்ணிலா, பொற்கிரணங்களை வெளிப்படுத்தி பேரொளி பாய்ச்சி புறப்பட்டு வந்த செங்கதிர்ச் சூரியன் இவையாவுமே இயற்கைப் பிரசவங்கள், நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இவையனைத்தும் இறை சக்தியின் இருமாப்பற்ற படைப்புக்களில் சில!

இதர பல உயிர் படைப்புக்கள் யாவுமே மை தீட்டப்பட்டது மெய்மை நிறை படைப்பாளன் ஒருவனாலேயே!! அவனுக்கு நிகர் அவனே! அவனி பெற்ற இவ்வியற்கைச் செல்வங்கள் அனைத்தும் அதற்குரிய ஆதாரங்களேயாகும். ஆனால் மனித படைப்புக்கள் யாவுமே தவணை காட்டும் பாவனைக் காலங்களுடன் அது எத்தரமாயினும் பலவீனங்களுடன் படுத்துறங்கி விடும். படைப்பாளனை சிந்திக்கவும், மனிதனின் சிந்தனைக்கும் வெளிச்சப்பாதை, ஒட்டகத்தின் படைப்பு.......

*'ஒட்டகத்தை அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது? என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்க வேண்டாமா? மேலும் வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது? என்பதையும், (அசையாது ஸ்திரப்படுத்தப் - பட்டுள்ள) மலைகளின் பால் அவை எவ்வாறு நடப்பட்டுள்ளது? என்பதையும் அவர்கள் கவனிக்க மாட்டார்களா?'*

*- திருக் குர்ஆன் - 88 : 17,19*

ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டிருக்கின்றது? என சிந்திக்குமாறு அல்லாஹ் குறிப்பிடுகிறான். இவ்விடத்தில் டால் ஸ்டீவன்ஸ் என்ற அமெரிக்க விஞ்ஞானி ஒட்டகத்தைப் பற்றி ஆய்வு செய்து விட்டு முன்வைக்கும் கருத்துக்கள் நோக்கத்தக்கவையாகும். பாலைவனக்கப்பல் எனப் பெயர் பெற்ற ஒட்டகம் உலகத்தின் பாலைப் பெரு வெளிகளைக் கடப்பதற்கு என்றே படைக்கப்பட்டது போல் இருக்கிறது எனக் குறிப்பிடும் அவர் அதன் அங்கம் அங்கமாக பகுப்பாய்வு செய்கிறார்.


### ஒட்டகத்தின் பாதங்கள்

அவை தட்டையாகவும் பெரிதாகவும் அடிப்பாதங்கள் துவளக்கூடியதாகவும் அமைந்துள்ளன. பாதங்கள் வேறு வடிவில் அமைந்திருந்தால் மணற்பரப்பிலிருந்து கால்களை வெளியே எடுக்க சிரமப்பட வேண்டியிருக்கும். ஆனால் துவண்டு நெளிந்து இடங்கொடுக்கக்கூடிய பாதங்கள் இருப்பதனால் அவை மண்ணில் அமிழ்ந்துவிடா.

### ஒட்டகத்தின் கழுத்து

அது நீண்டு வளைந்திருக்கும். அதனால் தரையில் சில இடங்களில் முளைத்துக் கிடக்கும் புற் பூண்டுகளையும் குத்துச்செடிகளையும் மேய்வதற்கும், உயர்ந்து நிற்கும் மரங்களின் உச்சியில் தளிர்த் திருக்கும் இலைகளை உண்பதற்கும் இது வசதியாக இருக்கிறது.

எழுத்து



முஹம்மத் ஹுஸைன்


### ஒட்டகத்தின் கண்கள்

காற்று அடித்துவரும் மணலும், கூச்சொளியும் சுடுவெயிலும், வெப்பமும் தாக்காதவாறு அதன் கண்கள் மிக அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. இவை மட்டுமல்ல, அதன் அடர்ந்த புருவமும், நீண்ட இமைகளும், பரந்தெழுந்து சுழன்று வீசும் பாலைமணலும், அனல் காற்றும் கண்களைப் பாதிக்காமல் தடுக்கின்றன. மேலும் அதன் கண்களில் விழித்திரை படலத்திலிருந்து பற்களைப் போன்று சில மடிப்புக்கள் தொங்கிக் கொண்டிருக்கும். இவை புழுதிப் புயலை விட்டும் கண்களுக்கு ஒரு திரையாக வேலை செய்கிறது. இவை எல்லாம் வேறு எந்தப் பிராணிக்கும் இல்லாத கண் அமைப்புகளாகும். இத்தகைய அற்புதக் கருவிகளை ஒரு சேரப் படைத்து, இயங்கக்கூடிய ஒரு கண்ணையாவது படைக்க மனிதனால் இயலுமா?

### ஒட்டகத்தின் உதடுகள்

அதன் உதடுகளும் விசேட அமைப்பைக் கொண்டதே. மேல் உதடு பிளவு பட்டு மிக உணர்ச்சியுடையதாக இருக்கும். இதனால் மண்ணில் கிடைக்கும் தானிய வகைகளை துருவித்தேடி எடுத்து விடும். அதன் வாய் வெளியே தெரியாத படி உற்புறம் படைக்கப்பட்டிருக்கிறது. பாலைவனத்தில் முளைக்கும் சப்பாத்தி கள்ளி போன்ற முற்செடிகளை அது விரும்பித் திண்பதற்கு இது உதவுகிறது. இந்த முற்செடிகளில் எண்பது சதவீதம் தண்ணீர் அடங்கியிருக்கிறது, வேறு எந்தப் பிராணியும் இம்முற்செடிகளை தொட்டும் பார்ப்பதில்லை! ஆனால் தண்ணீர் மிகவும் தேவையான பிரதேசத்தில் ஒட்டகைக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு இறைவன் எத்தகைய விந்தை முறையை ஏற்படுத்தியிருக்கிறான் என வியந்து கூறுகிறார்.

மேலும் மாபெரும் அமைப்பாளன் ஒட்டகைக்கு சிறப்பான ஒரு தனித்தன்மையுடைய இரத்தத்தைக் கொடுத்திருக்கிறான் என்று குறிப்பிடும் அவர் ஒட்டகையின் முதுகில் ஒன்று அல்லது இரண்டு திமில்கள் இருக்கின்றன. இவற்றில் ஏராளமான கொழுப்பு சேமித்து வைக்கப்பட்டிருக்- கிறது. இந்தக் கொழுப்பில் உள்ள இனிப்புப் பொருளை தண்ணீராக மாற்றிக் கொள்ளமுடியும். அல்லாஹ் ஒட்டகத்துக்கு அளித்திருக்கும் இந்த அற்புத ஆற்றல்தான் இப்பொருளை தண்ணீராக மாற்றிக் கொள்கிறது. இதன் காரணமாகத் தான் அது தண்ணீர் கிடைக்காத நிலையிலும் பாலைப் பெருவெளிகளில் கடுமையான சூட்டில் நெடுந்தொலைவு பயணம் செய்ய முடிகிறது.







இப்படி ஒட்டகையின் அமைப்பில் உள்ள பல அற்புதங்களை வரைந்து விட்டு ஒட்டகையினுள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டிய பல இரகசியங்கள் இருக்கின்றன. என்று "டால் ஸ்டீவன்ஸ்" குறிப்பிடுகிறார். எனவே ஒட்டகத்தின் படைப்பாளன் அல்லாஹ் எவ்வளவு நேர்த்தியான, அற்புதமான படைப்பாளன்! ■

# விண்ணுலகப் பயணம் இறைபணிப்பு! ஐவேளை தொழுகை இறைதுதிப்பு!





எழுத்து



முஹம்மத் ஜாபிர்

முஹம்மத் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட விண்ணுலக யாத்திரையானது ஓர் அதிசய நிகழ்வாகும். ஓர் அற்புதமாகவும் மாத்திரமின்றி பல தத்துவங்களையும், தாத்பரியங்களையும் தன்னகத்தே பொதிந்ததாகவும், அடிப்படையான பல உண்மைகளை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. நபியவர்களின் இவ்விண்ணுலக யாத்திரை இரு கட்டங்களைக் கொண்டதாக அமைந்தது. மக்காவில் அமைந்துள்ள அல் மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பாலஸ்தீனத்தில் அமைந்துள்ள அல் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு மேற்கொண்ட பயணம் அதன் முதற் கட்டமாகும். அதனை அல் இஸ்ரா என வழங்குகிறோம். இப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நபியவர்கள் அல் மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து வானுலகம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டதாகும். இதுவே மி'ராஜ் எனப்படுகிறது. இந்த யாத்திரையின் முதற் கட்டத்தை திருக் குர்ஆன் கீழ்வருமாறு விளக்குகிறது.

*மிகத் தூய்மையானவன், தன் அடியாரை ஓர் இரவில் அழைத்துச் சென்றவன்! மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து வெகு தொலைவில் உள்ள மஸ்ஜித் வரையில்! அதன் சுற்றுப்புறங்களை அவன் அருள்வளம் மிக்கதாய் ஆக்கினான். எதற்காக அழைத்துச் சென்றானெனில், தன்னுடைய சான்றுகளை அவருக்குக் காண்பிப்பதற்காக! உண்மையில் அவன் அனைத்தையும் செவியுறுபவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்!-17:1*

அண்ணலாரின் இப்புனித யாத்திரை முஸ்லிம்களின் இரு முக்கிய தலங்களுடன் தொடர்புற்று இருப்பதைக் காண முடிகிறது. அல் மஸ்ஜிதுல் ஹராமும், அல் மஸ்ஜிதுல் அக்ஸாவுமே இவ்விரு புனித ஸ்தலங்களாகும்.

## இஸ்ராவும் இஸ்லாத்தின் பூர்வீகமும்

நபிகளாரின் விண்ணுலக யாத்திரை இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகியோருக்கு இறை வழிகாட்டலும், வஹி - இறைசெய்தியும் இறங்கிய தலமான அல்மஸ்ஜிதுல் ஹராமுடன், மூஸா (அலை), ஈஸா (அலை) போன்றோருக்கும் இறைத்தூது கிட்டிய இடமான மஸ்ஜிதுல் அக்ஸாவுடனும் தொடர்புற்றுள்ளது. இந்த வகையில் அல் இஸ்ராவை நினைவுகூறும்போதெல்லாம் மதம், இறை வழிகாட்டல் பற்றிய இந்தப் பேருண்மையை நினைத்துப் பார்க்க வேண்டும். இஸ்ராவும் மி'ராஜும் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அளித்த கௌரவமாகவும் அமைந்தது. அண்ணாரை அல்லாஹ் இக்குறுகிய உலகத்திலிருந்து பரந்து விரிந்த வானுலகம் நோக்கி உயர்த்தி தன் சன்னிதானம் வரை வரவழைத்து கௌரவித்தான். பல அற்புதக் காட்சிகளையும் அன்னாருக்கு காண்பித்து தந்தான்.

அனைத்துக்கும் மேலாக நபியவர்கள் மேற்கொண்ட இவ்விண்ணுலகப் பயணம் அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒரு பெரும் பயிற்சியாக அமைந்தது. அல்லாஹ் அன்னாரை இந்த யாத்திரையின் மூலமாக உடல், உள, சிந்தனை ரீதியாக பலப்படுத்தினான். தனது தூதின் பாரத்தை சுமப்பதற்கும், தொடர்ந்து இடம்பெறவிருக்கம் ஹிஜ்ரத்-புலம்பெயர்தலின் சிரமங்களைத் தாங்கிக் கொள்வதற்கும், இனி வரும் அறப்போராட்டங்களின் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொள்வதற்கும் தேவையான மனோவலிமையையும் ஆன்மீகப் பலத்தையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான். இந்த வகையில் இஸ்ராவும், மி'ராஜும் அண்ணலாருக்கு முழு அளவில் வழங்கப்பட்ட பயிற்சியாக அமைந்தன.

நபியவர்கள் மி'ராஜ் பயணம் மேற்கொண்டது அவர்களுக்கு மன ஆறுதலையும் நம்பிக்கையையும் வழங்கக் கூடியதாக அமைந்தது. ஏனெனில், ஒருபுறம் நபியவர்களது அழைப்புப் பணிக்கு பக்க பலமாக, துணையாக, ஆறுதலாக, உற்சாகமூட்டுபவராக இருந்த அன்னை கதீஜா (ரலி) அவர்களும், பாதுகாப்பு அரணாக இருந்த சிறிய தந்தை அபூதாலிப் அவர்களும் ஒரே ஆண்டில் மரணமடைந்தார்கள். இவ்விருவரதும் இழப்பு நபியவர்களை கடுமையாகப் பாதிததிருந்தது. இறைநிராகரிப்பாளர்களின் தொந்தரவும், துன்புறுத்தலும் அதிகரிக்கத் தொடங்கின.

புனித மி'ராஜ் நினைவுகூரும் போதெல்லாம் மி'ராஜின் பரிசாக அமைந்த தொழுகையின் முக்கியத்துவம் உணரப்படல் வேண்டும். அதனை சீர் செய்து கொள்ள வேண்டும் என உறுதி கொள்ள வேண்டும்.

## மி'ராஜ் சித்தரிக்கும் இஸ்லாம்.

நபிகளார் மேற்கொண்ட மி'ராஜை மேலும் ஒரு கோணத்தில் பார்க்க முடிகிறது. அதாவது இஸ்லாத்தை, அதன் பாதையை படம் பிடித்துக் காட்டுவதாகவும், வேறு வார்த்தையில் சொல்வதாயின் இறைவனை அடைவதற்கான, அவன் திருப்தியை பெறுவதற்கான பாதையை, அப்பாதையின் மைற்கற்களை ஆரம்பம் முதல் இறுதி வரை சித்தரித்துக் காட்டுவதாகவும் மி'ராஜ் அமைந்துள்ளது. ■

தொடர்



திருக்குர்ஆன் பேசுகிறது 4

# இறைமொழி சத்தியவழி!

எழுத்து



∴பைஸல் முஹம்மத்

இதோ, என்னை ஏற்றுக்கொள்வதற்கும் என்னைப் பற்றி ஆராய்ந்து சிந்திப்பதற்கும் நான் உண்மையான இறைவேதமா இல்லையா என அறிந்துகொள்வதற்கும் உங்களுக்கு ஆவலாக இருக்கின்றதா? சுற்று பொறுங்கள்! எனக்குள் இருக்கும் எண்ணற்ற புதினங்களை நீங்கள் அறிய தருவதற்கு முன், என்னைப் பற்றி இன்னும் கொஞ்சம் அறிந்துகொள்ளுங்களேன்.

தனது கருத்தை ஒருவர் முன்வைக்கும்போது.. அதற்காக வாதாடுகின்றார். தனது வாதத்தில் அவர் எந்த அளவுக்கு உண்மையாக இருக்கின்றார்? தனது வாய்மைக்கு அவர் சமர்ப்பிக்கும் ஆதாரங்கள் யாவை? அதற்கான பின்னணி எவை? என்றெல்லாம் ஆராயப்படும்... வினாக்கள் வினவப்படும்.

நான் இறைமறையாக இருந்தபோதிலும், என் மீதும் பிறர் கொள்ளக்கூடிய இத்தகைய ஐயப்பாடுகளுக்கு நானும் ஆளாகக் கூடியவன்தான். அவர்கள் எழுப்பும் வினாக்களுக்கு நானும் விதிவிலக்கல்ல!

யார் மீது நான் இறக்கியருளப்பட்டேனோ, அவர் உண்மையான வர் தானா? உண்மையிலேயே நான் அவர் மீது இறக்கியருளப்பட்டேனா? அவருக்குப் பின்னரும்கூட நான் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு இருக்கின்றேனா?

ஏனெனில், நான் இறக்கியருளப்பட்ட நபருக்கு வழங்கப்பட்ட வேதம் தொலைந்து போயிருக்கலாம் அல்லது அவர் பெயரால் முன்னிலைப்படுத்தப்படுவது வேறொரு நூலாக இருக்கலாம். அல்லது கொற்களின் பயன்பாடு கருத்துக்களின் அமைப்பு முறை மாறி குளறிப் போயிருக்கலாம். அல்லது மூலநூலின் மொழியும் அதன் பிரயோகமும் வெவ்வேறானதாகவும் இருக்கலாம். இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டால் ஒரு நூல் பாதுகாக்கப்பட்டது, நம்பிக்கைக்கும் பின்பற்றுவதற்கும் உகந்தது எனும் மாபெரும் தகுபியை அது இழப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்.

எந்த ஒரு நூலாக இருப்பினும் அதுவும் இறைவேதம் எனும் சிறப்பு அந்தஸ்துக்குரியதாக இருக்கும்போது அந்த நூல் குறித்த நம்பக ஆய்வை மனிதன் செய்தேயாக வேண்டும். மேலும் இறுதிவேதம் என்று வாதாடும் நான் இத்தகைய ஆய்வை மேற்கொண்டு எனது நம்பகத்தன்மையை நிரூபித்தேயாக வேண்டியவனாக இருக்கின்றேன். ஏனென்றால், மற்ற வேதநூல்களோடு ஒப்பிடுகையில் நான் தனித்தன்மையும் சிறப்பும் கொண்டவன்.

எனவே, நான் இறையருளால் திண்ணமாக எனது நம்பகத்தன்மையை சரியாக நிரூபிப்பேன். ஏனென்றால், நான் மாற்றுக்கருத்துக்கு இடமில்லாத வகையில் நம்பகத்தன்மை கொண்டவன்.அதில் எந்த மாற்றமும் இல்லை. இதற்கு வரலாறே சாட்சி!

இருப்பினும் நிகழ் கால வாழ்க்கையில் இருக்கும் உங்களுக்கும் நான் மட்டுமே மறுமைநாள் வரையில் பாதுகாக்கப்பட்ட. பின்பற்றத்தக்க ஒரே இறுதிவேதம் என்பதை கிஞ்சிற்றும் ஐயமின்றி, உள்ளங்கை நெல்லிக்கனி போல் நிரூபிப்பேன்.. வல்ல அதிபதி எனக்கு தந்த உயிர்த்துடிப்பான உன்னத ஆதாரங்களோடு!

> நான் எந்த வகையிலும், எந்த நிலையிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத நம்பகத்தன்மை கொண்டவன்.

*அடுத்த இதழில் காண்போம், இறைநாடின்.*

# சகோதரத்துவக் குடைகள் பெற்றுத்தரும் நன்மை நிழல்கள்!




எழுத்து



அஷ்ஷேக் முஹம்மத் அல்-தப்தபாஈ

தமிழில்

அப்மு

முஸ்லிம்- என்பவன் ஏக இறைவனுக்கு முற்றிலும் அடிபணிந்தவன். தனது வாக்கில் உண்மையாக நிலைத்திருப்பவன். தனது செயல்களில் முற்றிலும் சிரமேற் செய்யும் வடிவினன். இஸ்லாம், தன்னைப் பின்பற்றுவோரின் தூய்மையும் சுத்தமும் குறித்து பெரும் கவனம் செலுத்துகிறது. அது உளத்தூய்மையாயினும் சரி, புறத்தூய்மையாக இருப்பினும் சரியே! ஒவ்வொரு முஸ்லிமும் தனது தனிப்பட்ட சுயவாழ்விலும் சரி, கூட்டு வாழ்விலும் சரி இத்தூய்மை அம்சத்தின் உன்னத தாத்பரியங்களை அறிவுடன் அதனை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அமல்படுத்த வேண்டும்.

தன்னை ஆரத் தழுவிக்கொள்ளும் மானுடனை இஸ்லாம் சகோதரத்துவ வட்டத்தினுள் கொணர்ந்து வேற்றுமைத்தளைகளிலிருந்து அவனை விடுவிக்கிறது. அனைவரும் சகோதரர்களே எனும் உன்னத உணர்வை ஒவ்வொருவரின் உள்ளத்தினும் விதைக்கிறது. இறைவனுக்காக வேண்டி உருவாகும் இத்தகைய சகோதர பந்தங்களை வல்ல ஏகன் பரிபூரணமாக ஒப்புக்கொள்கின்றான். இஸ்லாம் எனும் ஒரே குடையின் கீழ் அவர்களை ஆக்கபூர்வமான நலம் விரும்பிகளாக்கி நன்மையின் நிழலில் குளிர்காளச் செய்கின்றான்.

> அனைவரும் சகோதரர்களே எனும் உன்னத உணர்வை ஒவ்வொருவரின் உள்ளத்திலும் விதைக்கிறது.

சமூக வாழ்வில் மக்களிடையே பரஸ்பர தொடர்புகள், நடத்தைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கின்றது இஸ்லாம்! அதேபோல், அன்பும் அறனும் வாழ்வின் அகண்ட பிரதேசமாக விளங்க வழிகோலுகிறது. “தனிமரம் தோப்பாகாது” என்பதை வலியுறுத்தி அனைவரும் சேர்ந்த கூட்டுவாழ்வை நிர்மாணித்து செயல்பட ஊக்குவிக்கிறது.

மற்றொரு, உயரிய தேட்டமாக இஸ்லாம் மனிதகுலத்துக்கு முன் வைப்பது இதுவே: அதாவது, பிறருடன் அழகிய நடத்தையை மேற்கொள்வது! மனிதர்கள் ஒவ்வொருவருடனும் ஒரு முஸ்லிம் மிக அழகிய நடைமுறையில் பழக வேண்டும். அவர்கள் தன்னைப்போன்றே முஸ்லிமாயினும் சரி, முஸ்லிமல்லாத பிற சமூகத்தைச் சேர்ந்தவராயினும் சரியே!

நல்ல வார்த்தைகளைப் பேசுவது, பிறருடன் தொடர்பு அழகிய சொற்களைப் பயன்படுத்துவது, உள்ளிட்ட பண்பு நலன்களின் உயரிய தேட்டங்களை முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் பின்பற்ற விரும்புகிறது இஸ்லாம்!

இத்தகைய பரிபூரண வாழ்க்கைத் தேட்டத்தை உயரிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வெற்றிவாகை சூடிட நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

*அடுத்த இதழில் காண்போம், இறைநாடின்.*



## சிறந்த பெண்

# சீரிய குடும்பத்தின் சீர்மிகு சிற்பம்...!

எழுத்து



ஷாரா

குடும்பங்களின் கூட்டிணைப்பே சமூகமாகும். குடும்பங்கள் சீரடைய சமூகம் சீர்பெறும். ஒரு குடும்பத்தின் அமைப்பை நிர்மாணிக்கும் திறன் பெண்ணுக்கு மட்டுமே இறைவன் கொடுத்த வரம். பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுப்பதுடன் அவளது பணி முடிவடைந்து விடுவதில்லை. மாறாக பாலூட்டும் போது அதனூடாக அவளது பண்புகள், பழக்கவழக்கங்கள்,மொழி,மார்க்கம் என்ற அனைத்து அம்சங்களையும் சேர்த்தே ஊட்டுகின்றாள்.

இந்தவகையில் சமூகம் நாடி நிற்கின்ற இஸ்லாமிய சந்ததியினரை உருவாக்கும் மகத்தான பணியை சிரமேற்கொண்டு செய்கின்றாள். இத்தாய்மைத் தகைமையின் பணிக்கு ஈடு-இணை கூறிட முடியுமா? இந்த மகத்தான பணிச்சேவையின் வெற்றியும் தோல்வியும் பெருமளவில் ஒரு பெண்ணின் கையில்தான் தங்கியுள்ளது எனில், அது மிகையல்ல! இப்பணிக்கு மேலும் உரம் சேர்க்க அவள், மார்க்க உணர்வுள்ளவளாக இருப்பது அவசியம். இல்லையெனில், அநியாயம்,அட்டூழியங்களைக் கொண்டு கொடுமை இழைக்கும் சமூகத் துரோகிகளைத்தான் அவளால் சமூகத்துக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும். எனவே, இவற்றுக்கெல்லாம் மூலாதாராமாக விளங்கும் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தலில்தான் அனைத்தும் அடங்கியுள்ளது என்பது வெள்ளிடை மலை!.

### மனைவியைத் தேர்வு செய்ய சிறந்த அளவு கோல் எது?

இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

*ஒரு பெண் அவளது அழகு,செல்வச்செழிப்பு,குடும்ப கௌரவம்,மார்க்கப்பற்று ஆகிய நான்கு விஷயங்களுக்காக மணமுடிக்கப்படுகிறாள். மார்க்கப்பற்றுள்ள பெண்ணையே மணமுடித்து வெற்றி பெறுவீராக!*

*அறிவிப்பாளர்: அபூஹுரைரா-ஆதாரம்: புகாரி, முஸ்லிம்*

இஸ்லாம் சொல்லும் முதல் அளவுகோலைப் புறக்கணித்து, மார்க்க உணர்வை மதிக்காது பெரும் செல்வம், நிறைந்த அழகு, கவுரவமிக்க செல்வாக்கு, குடும்ப அந்தஸ்து இவைகளை மட்டுமே கவனத்தில் கொண்டு தமது துணையைத் தேர்ந்தெடுக்க முற்படும்போது அது குடும்பத்தினுள்ளேயும்,சமூக மட்டத்திலும் பல்வேறுபட்ட பிரச்னைகளைத் தோற்றுவிக்கும். இவ்வகையான தேர்ந்தெடுத்தல் குறித்து முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வாறு கண்டித்துப் பேசினார்கள்:

*நீங்கள் பெண்களை அவர்களது அழகுக்காக மட்டும் மணந்துகொள்ளாதீர்கள் .சிலவேளை அவர்களது அழகு அவர்களை அழிவுக்கு இட்டுச்செல்லும். பெண்களை அவர்களது சொத்து செல்வங்களுக்காக மட்டும் திருமணம் செய்யாதீர்கள். அச்செல்வம் அவர்களை அத்துமீறச் செய்துவிடலாம். பெண்களை அவர்களது மார்க்கத்துக்காக மணந்துகொள்ளுங்கள். ஏனெனில் மார்க்க உணர்வுள்ள ஒரு கருப்பு அடிமைப்பெண் (மார்க்க உணர்வில்லாத ) அழகிய செல்வந்த பெண்ணை விட மிகவும் சிறந்தவள்.*

*அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அமர் (ரலி) - ஆதாரம்: இப்னு ஹிப்பான், முஸ்னத் அஹ்மத்.*

இஸ்லாமிய உயர் சிந்தனைகளை மறந்து உலகத் தேவைகளின் அடிப்படையில் ஒருவர் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க முற்படுகின்றார்.இதனால் பல்வேறு விதத்திலான எதிர்கால ஏமாற்றங்களை அவர் சந்திக்கின்றார். வாழ்க்கையை சலித்துக்கொள்ளும் நிலை உருவாகின்றது. அவனால் உருவாக்கப்படும் சந்ததி பாதிப்புக்களைத்தான் பறைசாற்றிக் கொண்டிருக்குமே அன்றி, வழித்தோன்றல்களின் வாஞ்சைமிகு வாழ்க்கைக்கு வளம் சேர்க்காது. சொத்துக்களின் மோகம், சீதன எதிர்பார்ப்புக்களே முக்கிய அம்சமாக அமையும்போது மார்க்க உணர்வுள்ள பெண் பின்னால் தள்ளப்படுகின்றாள்.

இதனால் உயர்ந்த பண்பாடுகள் குழி தோண்டி புதைக்கப்படுகின்றது.அதற்குப் பதிலாக, வறட்டு கௌரவம், பகட்டு வாழ்க்கை, பண மோகங்கள் வேர் விட்டுப் பரவி சமூகத்தில் ஊடுருவிச் செல்லும். சிறந்த பெண்ணியத்தை வழங்கி, ஒட்டுமொத்த பெண்ணினத்துக்கே பெருமை சேர்த்த ஒரே வாழ்க்கைநெறி இஸ்லாமே!


அதிலும் இஸ்லாமிய கல்வியை தன்னகத்தே கொண்டு உலக அறிவும் பெற்ற பெண்ணானவள் கனிகள் பூத்துக்குலுங்கும் விருட்சம் போன்றவள். இதனால் அழகான, சுவையான, சத்தான, பயன்கள் சமூக தேவைகளுக்கு..

ஆகவே, இலட்சியம் இலங்கும் மார்க்க வனிதையைத் தேர்ந்தெடுங்கள். தற்காலிக உலகவாழ்வை இனிய சுவனவாழ்வாக பரிணமிக்கச் செய்யுங்கள்.

இறையருள் அதற்கு என்றென்றும் துணை நிற்கட்டும்! ■

> *சொத்துக்களின் மோகம், சீதன எதிர்பார்ப்புக்களே முக்கிய அம்சமாக அமையும் போது மார்க்க உணர்வுள்ள பெண் பின்னால் தள்ளப்படுகின்றாள். இதனால் உயர்ந்த பண்பாடுகள் குழி தோண்டி புதைக்கப்படுகின்றது.*

வலிமை கொண்ட இளம் புஜங்களே..!
நீங்களே வாழ்வின் நிஜங்கள்..!!




காற்றுக்கள் உங்கள் கனவுகளை
சிறை வைக்காதிருக்கட்டும்..,
ஏற்றங்களை நீங்கள் தாவாத வரை..!

இன்பக்கனிகள் பிழிந்து கிண்ணம்
நிறைத்திட்டபோதும்..,
அகலக்கால் வைத்து ஆதவனை
எட்டிப்பிடிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்..!

வசந்தம்
ஆகஸ்ட் '08 இதழ்

## இளைஞர் சிறப்பிதழாய்
மலரவிருக்கின்றது!

வாசிக்கத் தவறாதீர்..!
பிரதிகளுக்கு முந்துவீர்

## இளைஞர் சமூகமே..!

வன்மை குத்தும் அறியாமைகளுக்கு தாழ்ப்பாளிட்டு
இனிமை தாலாட்டும் அறிவுத் துணைகளில் உங்கள் ஏகாந்தம் பூக்க....

- உமது மதநம்பிக்கையும் நடைமுறைவாழ்வும் எப்படி?
- உமது கனவுகள் கைகொடுக்கின்றதா..? காற்றில் பறக்கின்றதா..?
- தயவுகாட்டா தனிமைகளில் உமது இதயங்கள் தவிக்கின்றதா..?



# அறிவுக் குறுக்கெழுத்து - 3

போட்டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ற | 3 | ■ | ■ | 6 | | | 9 | 10 |
| | ■ | | ■ | 15 | | | ■ | ட் | ■ |
| | | | 24 | ■ | று | ■ | 28 | | |
| 31 | த | | | | ■ | ■ | | | ■ |
| ■ | 42 | ■ | | ■ | ■ | 47 ஜ | | 49 | |
| 51 | ல | 53 | | ■ | 56 | ■ | 58 | 59 | |
| ■ | | யி | 64 | | | ■ | 68 | 69 | ○ |
| ■ | 72 | 73 | ■ | 75 ○ | ○ | ■ | | | 80 க |

## பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்!

### விதிமுறைகள்

1. இக்குறுக்கெழுத்துப் போட்டியின பெரும்பாலான வினாக்களுக்குரிய விடைகளை“வசந்தம்” -ஜூ 2008 இதழிலிருந்து பெறமுடியும்.
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி,எண்,குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர்கள் 3 பேருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 2400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது amusavir@gmail.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் -SEEMATY, மிர்காப் - People: Restaurant,மிர்காப்--Careem Lanka,மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka,மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளை
9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.08.2008
10. வெற்றி பெற்றோர் விவரங்கள் செப்டம்பர் இதழில் வெளியாகும். இறைவன் நாடினால்..!

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்!

### இடமிருந்து வலம்.

1.பறவைகளின் வர்ண ஆடை (3) 6.இது இல்லாத வாழ்வு கசக்கும். சந்தோஷம் இதன் இன்னொரு பெயர் (5) 15. உயிரினங்களின் சுவாசத்திற்கு தேவையானது. இயற்கை பிரசவித்தது (3) 28. சுவடு என்பதன் இன்னொரு பெயர் (3) 31.பழையதைக் குறிக்கும் ஒரு சொல்! குழம்பியுள்ளது.(5) 47.போதைப் பயன்பாடும் கடத்தலும் நடந்தேறும் நாடுகளில் ஒன்று (4) 51. நாம் வாழும் தளம். (4) 58 .தந்தை - வேறு பெயர்! (2) 64.மரணசாசனத்தின் வேறு பெயர், இங்கு குழம்பியுள்ளது!(3)

### வலமிருந்து இடம்.

64.உயிரினங்களில் ஊசலாடும் இது நொடியில் பிரியக்கூடியது! (3)

### மேலிருந்து கீழ்

1.வாய்விட்டு இதனை செய்தால் நோய் விட்டுப் போகும். (4) 3.ஒருவகை நோய் (4) 6.எம்மை சுற்றியுள்ள பகுதியை இப்படி கூறுவோம் (3) 9.இதன் முன் அனைவரும் சமம் (3) 28. பொய்களின் பிறப்பிடம்.. பாவங்களின் ...........(6) 24.இதில் வாழும் மக்கள் சிறிது நாகரிகப் போக்கு.(4) 42.அழகும் மணமும் கொண்ட இது ஒரு நாளில் தன் வாழ்வை முடித்துக்கொள்ளும்(3) 49.வசந்தம் ஜுன் முகப்புக் கட்டுரைத் தலைப்போடு தொடர்புடையது. (4) 53. திருக் குர்ஆனில் ஒற்றுமைக்குத் தொடர்புபட்டு வரும் இது!(3) 56.அழகு குரல் கொண்ட பறவை (3) 59.ஒருவகை இசை, இதனை தப்பாக போடாதே என்பர் (3)

### கீழிருந்து மேல்

42. மனிதர்களை கூறுபோடுகின்றது இது என்பர்! (3) 49. அருந்தக்கூடியது, இடைச்சொல் விடுபட்டுள்ளது. (2) 72. பெரிய சக்கரங்கள் இருப்பினும் இதனை கடலில் ஓட்ட முடியாது (2) 75. படி (2) 80. கவிதை வடிப்பவன் (4)

அனைத்து விடைகளையும் நிரப்பிய பின்னர் வட்டமிட்ட சொற்களை ஒழுங்குபடுத்தினால் வாழ்வை ஒளியூட்ட அவசியமான மூன்றெழுத்து சொல் வரும்!

☐ ☐ ☐

பெயர்:
குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No:
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

தொலைபேசி:
வசிக்கும் இடம்:




பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.08.2008

இறை பற்றிய கருத்துக் கலவரங்களில் நீங்கள் மோதி...,
உங்கள் இதயங்கள் பாதி
அறிவுடன் சிக்கிக் கொண்டிருக்கின்றதா..?

ஆதி முதல் அந்தம் வரையிலான
உங்கள் சிந்தனை விக்கல்களை
சீர்படுத்திக்கொள்ள நாடுகின்றீர்களா..?

நாவல நாயகர்
டாக்டர்
ஜாகிர் நாயக்
வரவேற்புத் தலைப்பு






# பெரும்பான்மை மதங்களில்
# இறை பற்றிய கருத்தோட்டம்!

`இளவேனிலின்`
இதம் தமிழில்

ஆகஸ்ட் '08 முதல்
இனிவரும் வசந்தங்களில்...
சாகச ஆரம்பம்..!






நற்சிந்தனைகள் இதயங்களை விரிவடையச் செய்யும்..,
கதிரவன் மெழுகை உருகச் செய்வது போல..!

தீயசிந்தனைகள் இதயங்களை இறுகச் செய்யும்
கதிரவன் களிமண்ணை இறுகச் செய்வது பொல..!

நற்சிந்தனைகளால் உங்கள் இதயங்கள்
விகிதங்களின்றி விரிவடைய...

வழிகாட்டுகின்றது...
இஸ்லாமிய நிலையம்


IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية
رحمة للعالمين...
Extn: 208 2444117
www.ipc-kw.com